3490

சிவமயம்

பராசக்தி பாமாலை

ஆக்கம் :
மு. கணபதிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

வெளியீடு :
சதுராலயம்
கோட்டைக்கல்லாறு.

விலை : 20/-

செபஸ்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

3490cc
110526
894.5
ணப

யாழ்ப்பாணம்.

முகவுரை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

24-2-1995
யாழ்ப்பாணம்

கிழக்கிலங்கையிலே சிவவழிபாட்டுடன் சக்தி வழிபாடும் பின்னிப் பிணைந்திருக்கின்றது. அதிலும், வருடந்தோறும் ஏறக்குறைய இங்குள்ள கிராமங்களில் சக்திக்கு விழா எடுத்து மன்றாடி வரம் பெற்று வாழ்வது எம் குல மரபாகும்.

அந்த வழிபாட்டுக்குரிய பாடல்கள் பல மங்கியும், மறைந்தும், சிதைந்தும், திரிந்தும் போய்க்கொண்டிருப்பதை மனதிற்கொண்டு கால மாற்றத்திற்கேற்பவும் எளிதில் மனனம் செய்து பாடி வழிபடவும் வேண்டும் என்னும் வேணவாவுடனும் ''பராசக்தி பாமாலை'' என்னும் இந்நூலைச் சக்தியின் மேற்கொண்ட பேரன்பினால், அறிவில் குறைந்த அடியேன் வெளியிட ஆசை கொண்டுளேன்.

இச் செயல் ''கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானு மதுவாகப் பாவித்த'' மாதிரியிருந்தாலும், கல்விமான்களும், அறிஞர்களும் எனது குறைகளை ஆராய்ந்து பிழைகளை மன்னித்து ஏற்ற புத்திகளையும், திருத்தங்களையும் கூறி, என்னுடைய மென்மேலும் வளர்ச்சியடைய உதவி புரியுமாறு பணிவுடனும், அன்புடனும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அத்துடன் இந்நூலை வெளியிடுவதற்கு பல வித உதவிகளையும் செய்து தந்த திரு. வே. ஜீவராஸ் (மட்டக்களப்பு, மாவட்ட சர்வோதய இணைப்பாளர்) அவர்களுக்கும், இதற்கு அணிந்துரைகளும், அறிவுரைகளும் தந்தவர்களான உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கம், களுவாஞ்சிகுடி கல்வி அதிகாரி திரு. வே. கணபதிப் பிள்ளை அவர்களுக்கும், இவ்வித நூல் ஒன்று தேவை என என்னை எழுதும்படி, தூண்டிப் பல உதவிகளைச் செய்த திரு. இ. செல்லத்துரை, பிரசித்த நொத்தாரிஸ் அவர்களுக்கும், எனது ஆக்கத்தை அழகான எழுத்துருவில் பிரதி செய்து உதவிய செல்வி. இராசநாயகம் ஜெயானி அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

எனது ஆக்கங்களுடன் எல்லாக் கிராமங்கட்கும் தேவைப்படுவதான கண்ணகை அம்மன் குளிர்த்தி, மாரியம்மன் குளிர்த்தி,

கண்ணகி கலியாணக்கால் சுற்றுக்காவியம் என்பவற்றையும் ஒலைச்சுவடி களில் இருந்து பிரதி செய்து, பின் இணைப்பாக இந் நூலில் சேர்த்து உள்ளேன். இதன் நோக்கம் என்ன வெனில் ஒலைச்சுவடிகளில் உள்ள எழுத்துகளைப் பலர் வாசிக்கும் போது இடர்படுவதைக் கருத்திற் கொண்டேயாகும்.

கடல் நாச்சியம்மன் வரலாற்றுக் காவியத்தில், இடத்திற்கு இடம் வித்தியாசமான வரலாறுகள் தெரிகின்றன. அதை நான் அறிந்த வரையில் எழுதியுள்ளேன். மேலும் தெளிவான வரலாறு தெரிந்தால், அதை ஏற்றுத் திருத்தம் செய்து கொள்ளச் சித்தமாக உள்ளேன் என்பதையும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலை அழகுடனும் துரிதமாகவும், தெளிவாகவும் அச் சேற்றிய புனித செபஸ்தியார் அச்சகத்தாருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

2945

மு. கணபதிப்பிள்ளை
நூலாசிரியர்.

மட்/கோட்டைக்கல்லாறு - 02
கல்லாறு.
1989 - 05 - 05

பராசக்தி பாமாலை நூலுக்கு

திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

(கல்வி அதிகாரி)

அணிந்துரை

இன்றைய சமூக, சமயச் சூழ்நிலையில் சைவமக்களிடையே சக்தி வழிபாடு பெற்று வரும் முக்கியத்துவம், யாவருமறிந்த தொன்றாகும். எனவே, 'பராசக்தி பாமாலை' எனும் இப்பனுவலை இக்கால கட்டத்தில் வெளிக்கொணர்வது பொருத்தமான ஒரு சீரிய பணியாகும்.

இப்பாமாலையை, அன்னையின் பாதாரவிந்தங்களிற் சூட்டியுள்ள கவிஞர், திருமுருகப்பன் கணபதிப்பிள்ளை அவர்கள் கோட்டைக் கல்லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியராவர். சமயத்தை வெறும் தத்துவமாக மட்டும் கொள்ளாமல், அதை வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் அனுட்டித்துப் பயன்பெறும் ஒரு பண்பாளர் அவர். கலைமகள் திருவையால் கவிதை புனையும் ஆற்றல் இயற்கையாகவே கைவரப் பெற்றவர்; தமது குருவும் வழி காட்டியுமாகிய, மட்டுநகர் செ. பூபாலபிள்ளை பண்டிதர் அவர்கள் இடம் பாடம் கேட்டதன் மூலமாக அக்கலையை மேலும் வளர்த்துக் கொண்டவர்; வாகீச கலாநிதி உயர்திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களின் ஆசிர்வாதத்தை நேரடியாகப் பெற்றவர்.

ஆசிரியராகப் பணிபுரிகையில், பாடசாலைக்கு உள்ளும் வெளி யிலும், கவிதை, நாடகம், கூத்து, கரகம், வில்லுப்பாட்டு முதலிய நுண்கலைப் பிரிவுகளுக்கு மேலான இடமளித்துப் போஷித்த இந் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர். மட்டுநகரின் உயரிய கலைப் பாரம் பரியங்களைப்பேணி வளர்ப்பதில் இவரின் பங்களிப்பு, சம்பந்தப் பட்டவர்களால் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இந்நூலிற் காணப்படும் அம்மன் காவியம், கும்மி, சிந்து, கரகம், குளுத்திப் பாடல்கள் நமது ஆலய விழாக்களின் போதும், ஏனைய கலாச்சார நிகழ்ச்சிகளின் போதும், உரிய இடத்தைப்

பெற்றுப் பயனளிக்க வேண்டுமென்பது எனது அவா. நூலாசிரியர் இத்தகைய ஆக்கங்கள் இன்னுஞ் சிலவற்றையும் வைத்திருக்கிறார் எனவும் அறிகின்றேன். அவற்றையும் விரைவில் அச்சு வாகன மேற்றி வெளிக்கொணர வேண்டுவது தமிழரின் பண்பாட்டுப் பரிணாமத்தில் ஈடுபாடுடைய நன் மக்களின் கடமையாகும்.

ஆசிரியரின் கலைப்பணி வெல்க!

வே. கணபதிப்பிள்ளை

கோட்டக்கல்விப் பணிமனை,
களுவாஞ்சிகுடி.
1989 - 03 - 23.

மாநகர நூலக சேவை
மாம்பழுணம்.

அணிந்துரை

தமிழ் இலக்கியப் பரப்பில் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய பிரபந்தங்கள் பல பள்ளு, சிந்து, அம்மானை, தாலாட்டு, ஊஞ்சற்பா போன்ற வடிவங்களில் அமைந்திருப்பது கண்கூடு. இவை கிராமியத் தேவதைகளைப் பாடுவதுடன் கிராமிய மக்களுக்குப் பிடித்தமான வடிவங்களாகவும் இருப்பதால் அவற்றை மக்கள் இலக்கியமென்றே கூறலாம்.

இவ்வகை இலக்கியங்களைத் துருவி ஆராய்பவர்கள் கிராமிய வாழ்க்கையின் நாடித்துடிப்பு இவற்றினூடே தொனிப்பதைக் காணலாம். கிழக்கிலங்கையில் அட்டைப்பள்ளம் கணபதிப்பிள்ளை ஆசிரியர் தொகுத்து வெளியிட்ட ''மகாமாரித்தேவி திவ்வியகரணி'' என்ற நூல் இதற்கோர் உதாரணம்.

பொதுவாகவே கிழக்கிலங்கைக் கிராமங்களில் கண்ணகி காவியமும் அதனோடிணைந்த காவடிப்பாட்டு முதலியனவும் தலைமுறை தலைமுறையாக ஏட்டுச்சுவடிகளிலும், வாய்மொழிப் பயிற்சியிலும் உலவி வந்துள்ளன. கால ஓட்டத்தின் நாகரிக வளர்ச்சியில் இவை அருகி வருவதையும் நாம் பார்க்க முடிகிறது.

இந்தப் பின்னணியில் பழம்பெரும் கிராமியக் கலைஞரும் ஆசானுமான திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் ஏட்டுச் சுவடிகளிலுள்ள பல பாடல்களைத் தொகுத்தும் தானே புதிதாகச் சிலவற்றை ஆக்கியும் நூலாக வெளியிட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. ஏற்கனவே இவர் கிழக்கிலங்கைக் கிராமங்களில் அமைந்துள்ள கண்ணகையம்மன் கோயில்கள் மீது கிராமத்துக்கு ஒரு பாடல்வீதம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய பாடல்களில் மரபுவழி தவறாமலும் கிராமியச் சாயல் மாறுபடாமலும் காவியச் சிறப்பும் கவிதை நயமும் பொதிந்திருப்பதைக் காணமுடிகிறது. அத்துடன் அமையாது இறை தத்துவங்களையும் ஆங்காங்கே இவர் புகுத்தியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. சில வரிகள் வருமாறு.

ஆகாயம் பூமியெல்லாம் உந்தன் சக்தி
அணுவாகத் தோன்றுதம்மா ஆனால் இங்கு
வாகான வாழ்வின்றி மக்களெல்லாம்
மனங்கலங்க மாதாவே என்றழைத்தும்.....

கிராமியப் பாடல்களுக்கே உரித்தான முறையில் சமகால நிகழ்வுகளையும் இப்பாடல்களில் அவர் புகுத்தியுள்ளார்.

உதாரணம்: ஈனர்களின் வெறியாட்டம் கூடுதம்மா
எங்களுமே இரத்தாறு ஓடுதம்மா
மானமுள்ளோர் வாழ்வெல்லாம் மாறுதம்மா
மற்றுமிங்கே கொலைகளவு தோணுதம்மா

சக்தியின் தத்துவம்கூட ஒரு பாடலில் பின்வருமாறு வெளிப்படுகிறது.

ஒளியாகி வளியாகி உணர்வுமாகி
ஓங்காரத் தத்துவத்தின் உள்ளே நின்று
முழுதாக எமைக்காத்து வந்த தாயே
முன் வாராய் எமைக் காக்க அருளும் தாராய்

கிராமியப் பாடல்களில் கலையழகும் கவிதைச் சிறப்பும் மிகுதியாக இடம் பெறுவதில்லை. இடம்பெறவும் முடியாது. அவை கிராமிய மக்களுக்கு எளிதில் புரியும் வகையிலும் மனதில் பதியும் வகையிலும் அமைந்திருக்கும். அமைந்திருக்க வேண்டும். தமிழகத்தின் பிற பல கிராமியக் கவிஞரான கொத்தமங்கலம் சுப்புவின் பாடல்கள் இவ்விடத்தில் நினைவு கூரத் தக்கவை.

இக்காலத்தில் இளையராஜா போன்ற இசையமைப்பாளர்கள் கிராமியப் பாடல்களை சினிமாவிற் புகுத்தும்போது ஜனரஞ்சகமான மெட்டுக்களில் அமைப்பதைப் பார்க்கிறோம். இம்முயற்சி கிராமியப் பாடல்களை மக்கள் மத்தியில் பரவச்செய்வது என்றவகையில் மட்டுமே திருப்தி தரும். ஆனால் கிராமங்களில் கிராமியப்பாடல்களைப் பாடுவதற்கும் ஒரு முறை - மெட்டு இருக்கிறது. அதை மாற்றுவது முறையல்ல.

முக்கியமாக அம்மானை, காவியம், சிந்து முதலியவற்றை அதற்கே உரிய மெட்டுக்களில் பாடவேண்டுமென்பது கிராமிய மக்களின் பாரம்பரிய நெறி. அதற்கேற்ற வகையில் இச்சிறு நூலிலுள்ள பாடல்கள் அமைந்திருக்கின்றன.

நூலாசிரியருக்கு எனது பாராட்டுகள்.

இரா. நாகலிங்கம்
(அல்புமணி)

'பார்வதியகம்'
ஆரையம்பதி.
18 - 4 - 89

வாழ்த்து

கல்வியொடு, கலை, கலாச்சாரம், சுகாதாரம்
கஷ்டமுறும் மக்கள் வாழ்வைக்
கருத்தினிற் கொண்டவன், கடமையிற் செம்மையோன்;
காண்பதற்கருங் குணத்தோன்;
நல்வினைகள் பற்பல, நாட்டிற்குச் செய்பவன்
நம் சமூகம் சிறக்கப்
பல்வினைகள் வந்தாலும் பயமின்றித் துணிவுடன்
பணிகள் பல செய்து வருவோன்
நல்லவன் ஜீவராச் நயந்தே இந்நூலினை
நாட்டமுடன் அச்சதேற்றிப்
பல்லவர்க்கும் தந்த இந்த நற் பெருமையைப்
பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நூல் ஆசிரியர்

110500

வெளியீட்டுரை

கலை, கலாசாரம், விளையாட்டு, கல்வி, பொதுப்பணி ஆகிய நான்கு துறைகளையும் மேம்படுத்த அமைக்கப்பட்டது தான் சதுராலயம் கோட்டைக்கால்லாறு மக்களின் ஆதரவுடன் பல தொண்டுகளை ஆற்ற நாம் திட்டமிட்டுள்ளோம். விளையாட்டுத் துறை வளர்ச்சி கருதி அண்மையில் விளையாட்டுப் போட்டி ஒன்றினை நடாத்தினோம்.

''கல்வியிலாததோர் ஊரைத் தீக்கிரையாக்குவோம்'' என்ற மகாகவி பாரதியாரின் கூற்றிற்கு மதிப்பளிக்கும் வகையில் எமது கல்விப்பணியாக இந்தப் ''பராசக்தி பாமாலை'' என்ற நூலைக் கன்னி முயற்சியாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். எமது முயற்சியை ஊக்குவிக்குமுகமாக இந்த நூலை எழுதித்தந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பாடுடையோம். எமது பணி மேலோங்கி வளர உங்களால் இயன்ற ஒத்துழைப்பை அளியுங்கள். இந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்துப் பாதுகாப்பதன் மூலம் எமது முயற்சிக்கு ஊக்கமளியுங்கள். உங்களுடைய ஆதரவு மேலும் பல நூல்கள் வெளிவர உதவும்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகாக அச்சாக்கித் தந்த மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தினருக்கு எமது நன்றி உரித்தாகுக.

சதுராலயம்
கோட்டைக்கல்லாறு — செயலாளர்.
10 - 06 - 1989

உ

சிவமயம்

பராசக்தி பாமாலை

விநாயகர் துதி

ஏடெழுதக் கோடொடித்த எங்கள் முதல்வோனை
நாடுற் விக்கினதீர்க்கும் நல்லவனை நீடுலகில்
நிந்தனையைத்தீர்ப்பவனை நிம்மதியைச் சேர்ப்பவனை
சிந்தையிலே ஏற்றித் துதி.

சரஸ்வதி துதி

விருத்தம்

வெண்ணிறப்பூவில் வாழும் வித்தகி கமலச்செல்வி
எண்ணிலா ஞானசக்தி, ஈஸ்வரி; எழிலின்மிக்க
வண்ண வெண்மலரைத்தூவி; மலரடி வணக்கம் செய்தேன்
உன்னது அருளைத்தாராய் ஒளியென விளங்குமாதே

முருகக் கடவுள் துதி

கந்தா! கடம்பா! கதிர்வேலா! சாங்கேயா முன் சூரர்குலம்
வந்தே அறுத்தவடிவேலா! வள்ளிக்கினைந்த மணவாளா!
சிந்தித்தேனுன் பதமலரைத் தேவிபுகழை நான்பாட
முந்தித்துணையாய் நீயிருப்பாய் முருகா! திருமால் மருகோனே.

குரு வணக்கம்

பண்டைத்தமிழ் நூல்பலவற்றைப் பாரில் தேடி அலைந்தக்கற்று
கண்டோர் வியக்கும் வண்ணமுடன் கற்பித்தாய் நீ பூபாலா
இன்றே இங்கு நீயில்லை எழிலின் உருவை மனம் நினைத்தே
உந்தன் நிறமை தனைப்பாட ஒண்ணு, ஒண்ணு என்னுளே
வந்தே பாட அருள்புரிவாய் வாய்த்த தமிழின் பண்டிதனே!
கந்தர்க்குரிய நூல்பாடிக் கவிதைத் திறமை காட்டிவைத்தாய்
சிந்தைக்குகந்த குருவேயுன் சிறந்தநல்ல அடிகளுக்கென்
இந்தநூலைச் சமர்ப்பணமாய் ஈட்டு ஆசி வேண்டுகிறேன்.

உ

கல்லாற்றுக் கண்ணகை அம்மன் காவியம்

அரசமலர் நிழல்தேடி அமர்ந்தகரிமுகவன்
அடியிணைதனைத்தொழுது அம்மை கண்ணகைமேல்
உரிய பழ முறையில் நற்காவியம்பாட
உலக முதலோடுமையும் ஒன்றுகிநின்று
திருமுகன், செங்கண்மால், தேவர்கள் தன்னுடனே
தேவியார் கமலமலர் வாணியும் துணையாய்
ஒருபிழையும் வாராது முன்னின்று காத்து
உதவிநர வேண்டுமும் பாதமலர் சரணம்.

ஆதி சிவனுடுமையார் அருகினிலிருந்து
ஐயனே! எமது குறை கேட்டருளுமென்று
ஓதினூர் பாண்டியனுல் நாணம் அடைந்து
உளமுருகி வாடியதை உத்தமர் தமக்கு
பாதிமதி சூடுமரனூர் அதை அறிந்து
பாண்டியன் கர்வமதைப் போக்கிடவே எண்ணி
சூதமதிலே கனியாய்ப் பூலோக மீதிலே
தோன்றுமெனவே வரம் தாவளித்தாரே.

இனிய விடை கேட்ட திருமகளாருமப்போ
இன்பமுடனே சென்று பாண்டியன் வாசல்
கனிதரும் மாமரம் தன்னிலோர் கனியாய்க்
கண்டவர்கள் எல்லோரும் ஆசைகொள் அழகாய்
தனியாகவே காய்த்து நிற்பதைக்கண்டு
தார்வழுதியும் மிகச் சந்தோஷம் கொண்டு
துணிவோடு அண்ணுந்து ஆய்ந்திடும் போது
துளிபால் விழுந்து நுதல் வீழிமறைந்ததுவே.

ஈடிலாக்கனிதனைச் சிலநாட் சுழித்து
எடுத்ததைப்பார்க்கவே எழில் செறிகுழந்தை
கோடி அழகோடங் கிருப்பதைக்கண்டு
குழந்தையின் மர்மமதை அறியவே எண்ணி
ஓடோடிக் கெணிதரைக் கூட்டியே விடயத்தை
ஓதவே அவர்களும் சோதிடம் பார்த்து
நாடாளும் மன்னவா! இம்மதலி தன்னுல்
நாடழியும், நம்மாட்சி தானழியும் என்ரூர்.

உற்றதிறல் கெணிகருரை கேட்ட பெருவழுதி
உடனேகிப் பைம் பொன்னின் பெட்டகமமைத்து
குற்றமற உள்ளே குழந்தைதனை வைத்துக்
கொண்டுபோய் வைகை நதி தன்னிலே விடவே
பற்றுடனே நதியந்தப்பேழை தனைக்கொண்டு
பத்திரமாய்க் கடல் மீது சேர்த்திடவே அன்று
வற்றுத ஆழ்கடலில் வருவதைக்கண்ட
மானுகர் தூக்கியதை மரக்கலமுள் வைத்தார்.

னர் சென்று பெட்டகம் தன்னைத்திறக்க
உள்ளே ஓர் அழகான பெண் மதலி கண்டு
மார்போடு ஏந்தியே மனைவியொடு சேர்ந்து
வளர்த்தெடுத்தே வணிகர் கோவலர் தமக்குப்
பேரானதிருமணம் செய்தங்கே வைத்துப்
பெருமையுறு நாகமணியிற் சிலம்பிட்டு
தார் சூடும் சோளரசன் மாளிகையில்மாதவி
தன் நடனம் பார்க்கவே கோவலனும் சென்ரூர்.

எண்ணமல் ஊழ்வினையால் மாதவியின் ஆடலில்
இதயம் மயங்கியே மனைவியை மறந்து
பொன்னை வாழ்வுடன் கைப்பொருள் இழந்து
பூவையவள் கண்ணகியை நாடித் திரும்பித்
தன் பிழை பொறுத்தருளவேண்டுமெனக்கேட்டுத்
தையலார் கால் சிலம் பொன்றீனை விற்றுத்
துன்பமற வாழவே சோளநகர் விட்டுத்
தோகையொடு பாண்டிநகர் இடைச்சேரிசென்ரூர்.

ஏலவே பாண்டமாதேவியர் சிலம்பை
இணக்கவே கொடுபோய் மறைந்த பொற்கொல்லன்
ஞாலமிதில் இதை வாங்க யாருமிலை வாரும் நீ
நான் விற்றே ஆயிரம் பொன்வாங்கித் தருவேன்
கோலமுறு பாண்டிமா மன்னன் மனைக்குக்
கூட்டியே கோவலரைக் கொண்டங்குசென்று
ஆலமாள் அரசனே! சிலம்புத் திருடனை
அடியேன் பொருளோடு கொடுவந்தேன் என்ரூன்

யோகன் நூலகம்

* ஏதிதென அரசனும் நூபுரந்தன்னை
இதயநிறை பாண்டிமாதேவியரிடத்தே
ஒதுவாய் உன்சிலம்போ? என அனுப்ப
உத்தமியாள் எனதில்லை என்றே உரைப்ப
தீதுபுரிகப்மாளன் இது என்னமாயம்
செய்தபொருள்நானுகும் இதையுணரவேணும்
ஆதாரம் தேவையிலை அத்தனையும் உண்மை
ஐயனே! கடமைதனைச் செய்யுமென நின்றான்.

ஐயனே! கள்வனிவன் கொல்லு மென ஓத
ஆத்திரமடைந்தே அரசனுமவ் வேளை
துய்யவனை வெட்டு மெனக் கட்டளையுமிட்டான்
துயர் கண்டாள் கண்ணகியும் கனவினில் அன்றே.
மெய்யே துடித்தாள் தலையில் அடித்தாள்
வேசமுடன சென்றங் குயிரைக்கொடுத்தாள்
தையலாள் கோவலர் சொன்ன மொழிகேட்டுச்
சண்டாள மன்னவன் அரண்மனை நடந்தாள்.

ஒண்டொடியாள் காற்சிலம்பொருகை தனிலேந்தி
ஓடோடிமன்னவனரண்மனை அடைந்து
நின்ற நிலை கண்டு நடுங்கியே காவலன்
நேராகப் பாய்ந்தோடி மன்னனிடம் கூறச்
சென்றே அழைத்துவா! என்றரசன் ஓதச்
சீற்றமுடன் சென்றே வளக்காடிவென்று
அன்றே கனல்மூட்டி மதுரையை எரித்து
ஆங்காரம் நீங்காது நின்ற கண்ணகையே.

ஓதரிய செயல் செய்து மீண்ட கண்ணகியின்
உக்கிரம் கண்டே பயந்த இடை(ய) மாதர்
பாதமதில் வீழ்ந்து பணிந்தே மன்றுடிப்
பத்தினியாரிடம் சேதியறிந்து
சூத மீதிற் கனியாய் வந்ததாயாரைத்
தொழுதங்கு அம்மானை கும்மிகளும் ஆடி
ஏது வினை வந்தாலும் எங்களைக்காத்திட
எப்பொழுது நீர் வருவீர் என்று கேட்டனரே.

* விடய விரிவுக்காக இரு 'ஏ' வரிப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஒளடதம் போல வினை நீக்குமாதாவும்
அது கண்டு கோபமது ஆறியபின்னே
செவ்வையாய் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம்
தீவினைகள் வாராது காப்பேனென்றேதி
வைகாசித் திங்கள் மதி மண்ணுலகில் நானும்
வருவேனென்றேதியே வடிவமதுமாறிக்
கொவ்வை இதழ்க் கண்ணகியார் குவலயம்விட்டுக்
குருபரன் கயிலைதனை நாடி ஏகினரே.

வாழி

ஏகிய கண்ணகியார் பாதமலர் வாழி;
இவ்வுலகு நல்லவர்கள் எல்லோரும் வாழி;
பாகமாய் அம்மையைக் கொண்டவரும் வாழி;
பழிவாங்கப்பட்ட தமிழ் மக்களும் வாழி;
ஆகமம் வாழி நல் ஆவினம் வாழி;
அழியாத சுற்புடைய அன்னையரும் வாழி;
தோகைமயில் ஏறிடும் சண்முகன், குஞ்சரன்
துணையோடு நித்தமும் வாழ, வாழியவே;

ட

கடல்நாச்சி அம்மன் காவியம்

–○●○–

காப்பு

1. கரிமுகன், வேலவன், கங்கைகொண்டோனுடு
சண்ணன், சரஸ்வதி கருணைதரவேண்டிப்
பரிவுடன் பாதமலர் கும்பிட்டுத்தேவியார்
பார்வதியம்மை கடல்நாச்சியாய் வந்த
திருமருவுசெந்தமிழ்க் காவியம்பாடவே
சிறுபிழையும் வாராது நல்லாசிதந்து
வரமருளவேண்டுமென மன்றுடியே இங்கு
மாதாவின் காதை தனை ஓதுகின்றேனே.

2. ஓதுகின்றேன் சுயிலை மீதிலே சிவனுமையும்
ஒன்றுகி அன்போடிருந்திடும் வேளை
பாதிமதி சூடும் அரன் பார்வதிதனக்கு
பரிவோடு குடிலைதனை ஓதிடவே எண்ணி
யாதொருவரறியாது குடிலை தனைமனிவிக்கு
நல்லமுறையாய் அங்கு ஓதிடும் வேளை
ஏதிதுவோ? ரகசியம் நாமறிவோமென்று
இளமுருகன் வண்டு உருவாகியே கேட்டார்.

3. கேட்ட கதிர் வேலவன் தன் மனதுள் வையாது
கெதியிலதைத் தேவர்கள் முனிவர்கள் பலர்க்கும்
நாட்டமுடனே ஓடி ஓதவேயாவர்க்கும்
நன்றுகக் கேட்டங்கிருந்திடும் வேளை
காட்டதனில் நடனமிடு கரியகறைக் கண்டனும்
கந்தரால் குடிலைவெளியானதை அறிந்து
ஆட்டுகின்றேன் இதனை அனைவர்க்கும் உரைசெய்த
அம்மை, மகனுரை என ஆத்திரமடைந்தார்

4. ஆத்திரமடைந்தவரும் அம்மையர் தமக்கு
அதியரசன் மகளாக அவதரியும் என்றும்
மாற்றுருவில் வந்ததை மற்றோர்க்குரை செய்த
மயிலோனே மகரமாய் வாரிசேரென்றும்
தோத்திரம் செய்தெம்மை தொழுதுவரு வேளை
துன்பமது திருமென அங்கவருரைத்து
காத்திருக்காமலே கனவேகமாகவே
கண்ணுதலோன் சுயிலை மலை தன்னை அடைந்தார்.

5. கண்ணுதலோன் சாபமதால் கதிரேசன்தானும்
கடல் மீது மகர மதுவாகவே செல்ல
எண்ணரிய துயருற்று எழில் சேர்மடந்தை
இவ்வுலகுதனில் வந்து அதியரசன்மனிவி
வண்ணவல்லி மங்கையார் மகளாய்ப்பிறந்து
வடிவு பெறு எழிலரசியாகவளர்ந்து
எண்ணரிய மக்களின் நண்ணு துயர்தீர்க்கும்
எழில்சேர் மடந்தை என இங்கிருந்தாரே.

6. இங்கிருந்தே தேவி எழில் சேர் மடந்தை
இனிய நற் தந்தையார் அதியரசன்பதியில்
மங்களமாய்க் கொடி ஏற்றியே வருகப்பல்
மகரமாய் வந்த திருமால் மருகனுலே
எங்கிலும் கண்டு அடித்தே உடைத்துவரும்
இன்னல் கண்டேமனமும் ஏங்கியேவாடிப்
பொங்கு சினம் கொண்டு மகரம் பிடிப்போர்க்குப்
பூவையையும் என்பதியையும் தருவேன் என்றான்.

7. என்றரசன் உலகெங்கும் இச்செய்தி தன்னை
எல்லோர்க்கும் அறிவித்த கட்டளையின் படியே
நன்றெனவே சிவனுரும் எழில்சேர் மடந்ததனை
நாம் வதுவை செய்யவே நாளிது தான் என்று
நின்றவரும் அந்தணராகவே உருமாறி
நிமலனும் நந்தியொடு தேவகணத்தோரைச்
சென்றூர் அழைத்தே கடலருகை நாடிச்
சீக்கிரமதாகவே வலை முடியும் என்றார்.

8. என்றவுடன் இனநிலவுப் படகில் அதை ஏற்றி
இழுகயிறு அதுவாகச் சேர்த்தனப்பூட்டி
நின்றவர்கள் ஓடமதில் ஏற்றியே வலையால்
நீள் மகரந்தன்னையே தேடிவலைந்து
ஒன்றுசச் சேர்த்தங்கே ஓ வேலா! என்றும்
ஓவேலா! வாவேலா! ஓவேலோ! என்றும்
எண்டிசையும் அசையவே இழுத்தே எடுக்க
இனமுருக மகரமது கரையடைந்ததுவே.

9. மகரமது கரையடைய மகிழ்வுடனே சிலபேர்
மண்ணுளும் அதியரசன் மனையிடையே ஓடிச்
சிகரமது போலே கிடந்த மகரத்தைச்
சீக்கிரம் கரைமீதிழுத்தோம் என்றேத
பகரரிய மகிழ்வோடு ஓடோடிவந்து
பாராளும் அதியரச மன்னனும் பார்த்து
மிகவிரைவில் சிவனுர்க்கு வதுவை செயவென்று
வேந்தனும் மாளிகை தனையடைந்தனனே.

10. மாளிகை அடைந்த அதிஅரச மன்னவனும்
மகளார்க்கு வதுவையது செய்திடவே விரைவாய்
மேள, தாளங்களொடு பந்தலுமமைத்து
வேதியனுய் வந்தவரை அங்கே அழைத்து
நாளோடு திருமணம் செய்திட எண்ணி
நங்கையொடு மனைவியையும் அங்கே அழைக்க
ஊழ் வினையோ? இதுவென்று தாயுடனேமகளும்
ஒன்றுசு நஞ்சுண்டு உயிரை விட்டனரே

11. உயிரிழந்தாரென்றறிந்த மன்னவனும்
ஒன்றுமே செய்ய அறியாதங்குவாடி
நயமாசு வேதியர்க்கிட்ட வாக்கினைநான்
நாதனே! எப்படிச்செய்வேனென்றேங்க
தைரியமாய் முன் வந்து வேதியருமப்போ
தரவேணும் திரை சேர்மடந்தை சவமென்று
திரு நீறை நந்தியிடம் வாங்கியே அவரும்
திரைசேர் மடந்தை உடல் மீதே எறிந்தார்.

12. எறிந்தவுடனே மங்கை திரைசேர் மடந்தையும்
ஈன்ற தன் தாயும் எழுந்திடவே அதனை
அறிந்தவர்கள் சிவனுரின் அரிய செயல் கண்டு
ஆதி சிவநாதரிவர் என்றே பணிந்து
சிறந்த நற் திருமணம் திரைசேர் மடந்தைக்குச்
செய்திடவே சிவனுரும் ஆசிகள் வழங்கி
மறைந்தாரே மங்கையொடு கைலாயம் நாடி
வானவர்கள், தேவர்களும் மன்றுடி நிற்க.

13. தேவலோகத்திலே கன்னிமார்புடைசூழத்
திரைமீது சுற்றுலாச் செய்திடவே எண்ணி
வால புவனேசுவரி மணிதாவாய் ஏறி
மங்கையர்களோடே மகிழ்ந்து நீராடித்
தூய நறுமலர் சூடி நிற்கின்றவேளை
துரிதமுடன் ஓந்தக்காரன் கந்தன் கப்பல்
பாய்மரம் தெறித்தே பழுதாகி நிற்கப்
பலபேரும் கரைதனைப் பார்க்கின்றவேளை.

14. பார்த்திடும் வேளையிலே தேவியொடு கன்னிமார்
பலரங்கு நிற்பதைக் கண்டுமெய் நடுங்கி
ஏற்புடைத்தாயென ஏவரும் அறிந்து
ஈஸ்வரியார் பாதம் பணிந்து மன்றுடித்
தார் சூடும் மாதாவே குற்றம் பொறுத்து
தயவுடனே எங்கள் பிழை தான்கழையுமென்று
காரிகையார் பாதமதில் வீழ்ந்து மன்றுடியே
கந்தனெடுமற்றேரும் கன்னிபதம் போற்றி

15. போற்றியே புஸ்பமொடு செங்கரும்பினீர்
புனுகு, சந்தனமோடு, சவ்வாது, சாந்து
ஏற்ற மிகுசர்க்கரைப் பொங்கலுமிட்டு
இனிய பால் தேன்கதலிப் பானக்கம் சேர்த்து
நாற்றிசையும் வலம் வந்து மன்றுடி நின்று
நாரியரே எம்பூசை ஏற்றருளுமென்னக்
காத்தருளும் தாயாரும், கன்னியருமங்கே
கந்தனது பூசையைக் கருணையொடு ஏற்றார்

16. ஏற்றவர்கள் மட்டு நகர், கல்லாற்றுக் கரைதனில்
இறங்கியவர், இடுபூசைதன்னையும் ஏற்றுக்
கூற்றுவன் திசைசென்று கோரக்களப்பில்
குளித்து வினையாடியே பூசை பல கண்டு
மாற்றியவரெலாம் மக்கட் கழித்து
வாரியிலே துயர்வரா வரமும் கொடுத்து
வேற்றுருவதாகியே கயிலையை அடைந்து
வேதனர் பாகமதில் வீற்றிருந்தாரே

மாதவன் நூலகம்

17. வேதனுரொடு தேவி பாவமலர் வாழி!
விநாதீர்க்கு கஜமுகன், விஷ்ணுவும் வாழி!
ஓதரிய புகழ் கொண்ட மயில் வீரன் வாழி!
உலகெலாம் அருள் வீசு சரஸ்வதியும் வாழி!
நீதிலார் வாழி தினம் இக்காதை தன்னைச்
சிந்தித்து மன்ருடி நிற்போரும் வாழி,
ஏதுகுறையில்லாது தமிழ் நாடு நகரெங்கும்
ஏற்றமுடன் வாழவே வாழி! வாழியவே!

ஒ

ண்ணகை அம்மன் காவடி விருத்தம்

—○●○—

காப்பு

அம்பிகையாள் புத்திரனே! அரனுர் திருமகனே!
தும்பிமுகத்துச் சுடரொளியே! - அம்பிகையாம்
கண்ணகியாள் தன்பெயரில் காவடிக்குப் பாவிசைக்க
அண்ணலே! தாராய் அருள்

விருத்தம்

அருள் புரிவாய் வடிவேலா! அம்மையாரவ்
வழகு நிறை கண்ணகியாம் தேவியாரின்
கருணைபெற முன் வந்துகாக்க வேண்டும்
கற்பரசியார் துணையும் சேரவேண்டும்
பெரிய புகழ் தனையுலகில் நாட்டிஅந்தப்
பிழை செய்த பாண்டியனை வதையே செய்து
அரியபுவி மகளாகக் கல்லாற்றூரில்
ஆதியிலே கோயில் கொண்ட அம்மையாரே.

ஆகாயம் பூமியெல்லாம் உந்தன் சக்தி
அணுவாகத்தோணுதம்மா! ஆனல் இங்கு
பாகான வாழ்வின்றி மக்களெல்லாம்
மனங்கலங்கி மாதாவே! என்றழைத்தும்
சோகமதும், துன்பமதும் கண்டு நீரும்
சும்மாதான் இருப்பதென்ன? துயரம் தீர்க்கப்
பாகான மொழியாரே! வந்துகாரும்
பட்டி நகர் குடிகொண்ட பாவையாரே.

இக்கணமே இது நல்ல வேளையம்மா;
எம்துயரம் தீர்ப்பதற்கு விரைந்து வாராய்;
பக்கமெல்லாம் படும் துன்பம் காண வாராய்?
வாவமென்ன செய்தோம் நாம் பார்த்திருக்க
மக்களுன்னைத் தேடுகிறர் மனமே சோர்ந்து
மழையில்லாப் பயிர்போல வாடி ஏங்கித்
தக்கவரம் தந்திடுவாய் காரதீவில்
தங்கி அருள் புரிதாயே சக்தியாரே;

ஈனர்களின் வெறியாட்டம் கூடுதம்மா;
எங்கணுமே இரத்தாறு ஓடுதம்மா;
மானமுள்ளோர் வாழ்வெல்லாம் மாறுதம்மா;
மற்றுமிங்கே கொலைகளவு தோணுதம்மா;
ஏனென்றும் கேளாமல் இருப்பதேனே?
ஏங்குகிறோம் உமதருளே நாடி இங்கே
ஞானமுடன் வீரமுனை கோயில் கொண்ட
நாச்சியரே குறை தீர்க்கவாராயம்மா.

உலகமெல்லாம் உமதருளே வேண்டிநிற்க
உத்தமியே! வாழாதும் இருப்பதேனே?
வலம் கொண்ட சிவனுரோடிடபமேறி
மனத்துயரம் தீர்த்திடவே வாராய் அம்மா!
கலங்குகிறோம் உமைத்தேடிக் கருணைதாராய்
கண்ணகியே! பத்தினியே! கற்புத்தாயே!
நலங்கொண்டு கல்முனையூர் கோயில் கொண்ட
நங்கையரே! குறை தீர்க்கவாராயம்மா!

ஊழி வினை கோதாரி வந்தபோதும்
உமதருளால் மக்கள் குலம் பிழைத்ததம்மா!
ஆனமுள்ள நோய் நொடிகள் பறக்குமம்மா!
அரிவையரே! உம்முடைய நாமங்கேட்டால்
பாழான நெருக்கடியுள் சிக்கிமக்கள்
பதறுகிறார் பாரதும் இருப்பதேனே?
மேளமொடு தவில் தாரை ஆர்ப்பரிக்க
விரும்பிநீலாவணையூர் மேவும் தாயே.

எரி செய்தாய் மதுரை நகர் கற்புத்தியால்
இடர் செய்த பாண்டியனே நீறே செய்தாய்
அரிவையரே! தவறிழைத்த பொன் செய்வோனே
ஆங்காரம் கொண்டழித்தாய் ஆயர்க்கெல்லாம்
திருவாயால் வரங்கொடுத்தாய் செழிப்புற்றோங்க
சிலம்பு கொண்டு நீதிதனைப் பிழைக்கவைத்தாய்
பெருகுவயல் நிறைமகிழூர் வாழுந்தாயே
பேதலித்தோம் எமைக்காக்க வாராயம்மா!

ஏன்? அம்மா! மழையில்லை மூன்றுமாரி
இதன் முன்னே பெய்ததம்மா இப்போதில்லை
வான் பொய்த்த காரணத்தால் பயிர்கள்வாட
மக்களிங்கு மனம் வாடிக் கண்ணீர் ஓடத்
தான் இன்னும் திருவுளந்தான் இரங்கவில்லை
தாயாரே! இனிமேலும் தாங்கமாட்டோம்
மேன்மையுறு கருவாஞ்சி, எருவில் தாங்கும்
மெல்லியரே வந்துவரம் தாராயம்மா!

ஐயனது பாகமதில் இடமே கொண்டாய்
அழகான பேழைதனில் துயிலே கொண்டாய்
வைகைதனி நீரோட்டம் வழியே வந்து
மாநகர் மகளாக வளர்ந்தாயன்று
செய்ய புகழ்கோவலரை மணமே செய்தாய்
தேசமெங்கும் சுற்பை நிலை நாட்டிவைத்தாய்
மெய்நோவ உமதருளே வேண்டுகின்றோம்
விரும்பிவந்து செட்டி நகர் உறைந்தாயே!

ஒளியாகி, வளியாகி. உணர்வுமாகி;
ஓங்காரத்தத்துவத்தின் உள்ளே நின்று
முழுதாக எமைக்காத்து வந்ததாயே!
முன்வாராய் எமைக்காக்க அருளும்தாராய்
பழியென்ன செய்தோம் நாம் பார்த்திருக்கப்
பதறுகிறோம் பராசக்தி ஓடிவந்து
தெளிவான தம்பிலுவில் கோயில் கொண்ட
தேவியரே! எமைக்காக்கவாராய் அம்மா!

3490 C

ஓயாது எமது குலம் மாழுதம்மா!
ஒரு தொழிலும் இல்லாது வாடுதம்மா
நோயாலே நாளாந்தம் மடியுதம்மா!
நோக்காயோ? கண்திறந்து பார்க்காயோ? நீ
தூயமனம் கொண்டெமது குறையைத் தீர்க்கத்
துரந்தாயே! எழுந்திங்கு வாராயம்மா!
மாயவலை தனிலிருந்தே மீள நாங்கள்
வரந்தாராய் புதுக்குடியூர் அமர்ந்தாயே!

ஔவையரின் துயர் தீர்க்க முருகன் அன்று
அருள் புரிந்தான் நாவல் மரம் தன்னில் நின்று
கவ்வ வரும் எங்களது துன்பம் நீக்கக்
காரிகையே நீ விரைந்து வாராயம்மா!
செவ்வரிகண் படர்ந்த திருமேனியோடு
செய்த பிழை அத்தனையும் பொறுத்து வந்து
உவ்வென்றே ஓலமிட்டோம் துயரம் தீர்ப்பாய்
உத்தமியே! ஆரைநகர் உறைந்ததாயே.

கூட்டாது தாங்கிடவே உலகவாழ்வைக்
கர்மவினை செய்தோமோ? அறியோம் அம்மா!
துட்டரது செயலாலே கண்ணீர் சிந்தத்
துயரமுற்று உன்பாதம் தேடி வந்தோம்
பட்டதெல்லாம் போதுமினித் தாங்கமாட்டோம்
பார்வதியே! துயரமெல்லாம் தீருமம்மா
மட்டுநகர் தன்னில் வந்து குடியே கொண்ட
மாதரசி மக்கள் கண்ணீர் மாற்றுமம்மா!

காருமினி எங்களுக்கு உதவியில்லை
கருணை கொண்டு நாதனுடன் இடபமேறி
பாருமம்மா; பரிதாபம் பார்க்கவொண்ணு
பத்தினியே! பஞ்சாளனும் ஆலியுள்ளே
ஊரறியக் கற்பை நிலை நாட்டிவைத்தாய்
உன்முகத்தை உலகமெல்லாம் தேடுதம்மா!
கோராவெளி, வந்தாறுமூலை தன்னில்
கோயில் கொண்ட நாயகியே சரணம் தாயே.

பேச்சி அம்மன் காவியம்

—○●○—

காப்பு

குணதிசையில் ஆழி ஒலி குமுறி ஒலிக்கக்
குடதிசையில் வாவி நீர் ஓடியதை நாட
வடதிசையில் மதிகண்டு மீனினம் பாட
வளமான கல்லடி உப்போடை தனிலே
திடமாக அருள்புரியும் எண்ணமே கொண்டு
தேவியார் பேச்சியாய் வந்தங்கமர்ந்த
மடமாது மீது நற்காவியம் பாட
மால் மருகன் கணபதியின் பாதமலர் காப்பு.

காவியம்

காப்பதாம் கமலமுறை காரிகையார் அடிகள்
கனிவோடு மன்னுடிவருவோர் தமக்கு
ஏற்புடைத்தானநல் அருளே கிடைக்கும்
இவ்வுலக மறைவிலே நல்வாழ்வு பெருகும்
வாய்ப்பான செல்வமொடு மங்களம் சேரும்
மாதாவின் இனிதான வரமும் கிடைக்கும்
பேய்த்துன்பமணுகாது பில்லி துயர் வாராது
பெருமை செறி ஈஸ்வரியின் பேரருள் கிடைக்கும்

பேரருளதான நீ! பேச்சியென வந்தநீ!
பெருமை செறி மானுகர் மகளாய் வளர்ந்தநீ!
நாரணர் தங்கைநீ! நல்ல கலி மகளும் நீ
நாதனுர் பாரிநீ! நற்சக்தியான நீ
காரணமதானநீ! கமலச்சிதேவி நீ!
காமாட்சியாளும் நீ! காளியென வந்த நீ
பாரெல்லாம் துயர் தீர்க்கும் பத்தினியாளும் நீ
பராசக்தி! கல்லடிப் பேச்சிமாதாவே!

மாதாவே இன்றிங்கு மக்கள் படுதுன்பம்
வாயாலே சொல்லவே முடியாது அம்மா
ஏதேனும் உன்கருணை இல்லாது போனால்
எமது குலம் இன்றே அழிந்து விடுமம்மா
எதாடயாருண்டு எம் துயரை இன்று
வையகத்தோராலே மாற்ற முடியாது
ஆதாரம் உனையன்றி யாருமில்லையம்மா
அம்பிகையுன் அருள் தந்து எங்கள் துயர் தீராய்

துய ரோடு உந்தனை நினைப்பவர் தமக்கு
துன்பமணு காதுதவி தந்த நீயலவோ?
கயமுகன், ராவணன், பாண்டியன், துரியன்
கர்வமதை அந்நாளில் நீயே அடக்கிப்
பயமின்றித் தேவரொடு மானிடரும் வாழ்ந்துன்
பாதமலர் என்றும் பணிந்து மன்றாடி
நயமாகவாழ்ந்த செயல் நாமறிகிலோமோ?
நாடியே கல்லடியூர் வாழும் என் தாயே!

தாயேயுன் பாதமலர் சரணம் புகுந்தோம்
தாங்கொணாவேதனைகள் தானகல வேணும்
நீயே வந்தெங்கள் துயர் தீராது விட்டால்
நிம்மதியே எங்களுக்கில்லையினியம்மா
நாயினும் கேடாக வாழும் நிலை கண்டும்
நற்கருணை தரமனது இல்லையோ? அம்மா!
சேய் வாடத் தாய்பார்த்திருந்த செயல் உண்டோ
தேவியரே! உப்போடை வாழும் மாதாவே!

வாழவே மாதமும்மாரி தரவேண்டும்
வஞ்சனை, பொய், சூதழிவு மாறிடவும் வேண்டும்
தாழ்வான எண்ணங்கள் தானகலவேண்டும்
சகோதரப் பாசங்கள் தான் நிறைய வேண்டும்
மாளாத ஆணவமும் மாறிடவும் வேண்டும்
மக்கள் துயரில்லாது வாழவும் வேண்டும்
நீள் சடையோன் தேவியே, நீ மனது வைத்தால்
நிட்சயம் இத்தனையும் நடவாதோ? அம்மா!

அம்மாவே! உந்தனை நினைப்பவர் தமக்கு
ஆகாத காரியம் ஏதுமிலையம்மா
எம்மையே வாட்டிடும் துன்பமது கண்டும்
இரங்காதிருப்பதுவும் ஏனோ? சொல்லம்மா!
உம்மாலே ஆகாததொன்றுமிலை அம்மா
உம்பர்தொழும் அம்பிகையே! ஒங்காரசக்தி!
இம் என்றால் ஏழுலகு ஆடாதோ? அம்மா
ஈசுவரி, சடாட்சரி, பேச்சியானவளே.

பேச்சியே உந்தனது நாமமதை ஓதப்
பித்தமொடு வாதம், சிலேற்பனம், கண்ணோய்
காய்ச்சலொடு வைசூரி, காசநோய், சூலை
காமாலை, வெப்புடன் கல்லீரல் வீக்கம்
ஆச்சரியமாகவே அகலாதோ அம்மா
அம்பிகையே! உந்தனது அருளாலே என்றும்
நாச்சியே! கல்லடியை நாடியிடம் கொண்ட
நாதனுர் தேவியே! நாரியம்பிகையே.

அம்பிகையே! மாதாவே! என்பிழை பொறுத்து
அண்டபகிரண்டங்கள் எங்கும் நிறைந்து
நம்பினோர்க்கருள் தன்னை என்றும் கொடுத்து
நாதனுர் துணையோடு நற்கிருபை தந்து
துன்ப துயரில்லாத வாழ்வினையுமீந்து
கூடரொளியாகியெம் உள்ளம் நிறைந்து
மங்களமதாக எம் பொங்கல், மடைஏற்று
மகிழ்வோடு மக்கள் தமை ஆண்டருளும் அம்மா!

அம்மையார் தன்மகன் ஆனைமுகன் வாழி
அழகு நிறை ஒளிகொண்ட வேலோனும்வாழி
தன்நிகரில்லாத சிவசங்கரன்வாழி
தாயான எங்களது ஈஸ்வரியும்வாழி
நன்மை பல செய்திடும் நல்லோர்கள்வாழி
நலமான அரசுபுரி செங்கோலும்வாழி
அன்னையுறை கல்லடியூர் அன்பர்களும்வாழி
அழகுதமிழ், மக்களும் வாழ வாழியவே!

110526

பராசக்தி இசைப்பாடல்கள்

—○●○—

வீதியுலா

விக்கன விநாயகனே! வேழமுகத்தைங்கரனே!
முக்கணனுர் புத்திரனே! மூலமுதலே

தங்கமயில் வாகனனே! சண்முகனே! மால்மருகா!
தாயார் மேல் பாடி, ஆட வந்துதவுவாய்

கல்லாறு வந்தமர்ந்த காரிகையே மாரியம்மா
நல்லாசி தந்திடுவாய் எங்கள் சக்தியே

பூவையவள் மாரியம்மன் பூலோகம் காப்பதற்குப்
பாவையவள் பொற்கரகம் மீதிலெழுந்தாள்

சுத்து கடல் ஓசையிடச் கரையோரம் வந்தமர்ந்த
பத்தினியாள் பொற்சரகம் மீதிலெழுந்தாள்

மாது பராசக்தியம்மை, மக்கள் தமைக்காக்கவென்று
மனதோடு பொற்கரகம் மீதிலெழுந்தாள்

ஆதிசக்தி, வீரசக்தி, அம்மை எங்கள் பராசக்தி
ஆயிழையாள் பொற்கரகம் மீதில் எழுந்தாள்

துட்டரை அழித்து வரும் துன்பமதை நீக்கவென்று
தோகையவள் பொற்சரகம் மீதில் எழுந்தாள்

சுத்தசக்தி, சோதிசக்தி, துன்பவினை தீர்த்த சக்தி
சுந்தரியாள் பொற்கரகம் மீதில் எழுந்தாள்

மாநிலம் செழிக்கவென்றும், மக்கள் துயர்நீரவென்றும்
மாதுமையாள் பூவுலகம் தன்னிலே வந்தாள்

வேப்பிலையைக் கைப்பிடித்து வேதனையைத் நீர்க்கவென்று
வீசி விளையாடி அம்மன் வீதியில் வந்தாள்

குற்றமெல்லாம் நீக்கியிந்தக் குவலயம் காக்கவென்று
கோதையவள் வீதியுலா தன்னிலே வந்தாள்.

வேறு

கல்லாறு கோயில் கொண்ட எங்கள் முத்துமாரி - அம்மா
காத்தருள் வாய் ஈஸ்வரியே எங்கள் முத்துமாரி

நல்லவரம் தந்திடுவாய் எங்கள் முத்துமாரி - அம்மா
நாயகியே காத்தருள்வாய் எங்கள் முத்துமாரி

மாதம் மூன்று மழை வேண்டும் எங்கமுத்துமாரி - அம்மா
மாநிலம் செழிக்க வேணும் எங்கமுத்துமாரி

பொல்லாத நோய் பிணிகள் எங்கள் முத்துமாரி - அம்மா
பூமிதனில் மாறவேண்டும் எங்கமுத்துமாரி

வைகுரி, சின்னமுத்து எங்கள் முத்துமாரி - அம்மா
வாராது காக்க வேண்டும் எங்கமுத்துமாரி

துட்டப் பசாசையெல்லாம் எங்கமுத்துமாரி - அம்மா
துரத்திவிட வேண்டுமம்மா எங்கள் முத்துமாரி

உத்தமியே! ஆதிசக்தி எங்கமுத்துமாரி - அம்மா
உன் கிருபைதாருமம்மா எங்கமுத்துமாரி

பத்தினியே! பார்வதியே எங்கமுத்துமாரி - அம்மா
பார்முழுவதும் காத்திடுவாய் எங்கள் முத்துமாரி

ஓங்காரத்துள்ளிருந்தே எங்கமுத்துமாரி - அம்மா
உதவி செய்ய வேண்டுமம்மா! எங்கமுத்துமாரி

ஆங்காரம் கொள்ளாமலே எங்கமுத்துமாரி - அம்மா
அரவணைக்க வேண்டுமம்மா! எங்கமுத்துமாரி.

தேசிய நூலகப்
மாநகர நூலக
யாழ்ப்பாணம்.

கும்மி

கொட்டிடுவோம் - கும்மி கொட்டிடுவோம் - எங்கள்
கோதையராம் பராசக்தியர்க்கு
எட்டுத்திசையும் இலங்கிடு சக்திக்கு
இன்பமுடன் கும்மி கொட்டிடுவோம்

பாண்டவர் தேவியாய் வந்துதித்து - இந்தப்
பாரினிலே நலன் காக்கவென்று
தோன்றியே நல்லாசி தந்திடு தேவியாம்
சுந்தரிக்குக் கும்மி கொட்டிடுவோம்

தக்கன் மகளாக வந்துதித்து - இந்தத்
தாரணியின் துயர் தீர்ப்பவளே
சொக்கனார் தேவியைத் துர்க்கையெனவந்த
தோகையர்க்கே கும்மி கொட்டிடுவோம்

வேதனை நோய் பிணி தீர்ப்பவளைப் - பல
சோதனை வந்தாலும் காப்பவளே
நாநிலத் தேவியை நல்லொளிச் சோதியை
நாடிவரந்தரக் கோரிடுவோம்

புன்னை மரநிழல் வந்தமர்ந்தாள் - எங்கள்
அன்னைபராசக்தியானவளும்
தென்னை மரச்சோலை சேர்ந்திடு நாடுறை
அம்மையர்க்கே கும்மி கொட்டிடுவோம்

மாதமும் மாரி மழை பொழிய - இந்த
மாநிலத்தோர்கள் துயர்தீர
வேதனையாவையும் நீர்த்திடவேண்டியே
மெல்லியர்க்கே கும்மி கொட்டிடுவோம்

சுந்தரி, அந்தரி, சோதிபராசக்தி!
துர்க்கையெனவந்த வீரசக்தி!
வந்தெமைக் காத்து வரந்தரவேண்டியே
மங்கையார் பாதம் பணிவோமே.

சக்தி வணக்கம்

அம்பிகையே பரா சக்தி! ஆனந்தம் அருள்சக்தி
துன்பமணுகாது எமைக்காருமம்மா
தோகையரே! நல்லவரம் தாருமம்மா.

ஐயனது பாகமதில் அமர்ந்தருள் புரிசக்தி
அல்லல் வினை நீக்கியெமை ஆளுமம்மா
அம்பிகையே நல்லவரம் தாருமம்மா!

துய்யவளே சோதிசக்தி! துட்டரை அழித்தசக்தி
வையகத்தினிலுனைத் தாருமம்மா
மாதேவி உந்தனருள் தாருமம்மா

மாத மூன்று மழைதேடி, மக்கள் துயராள்வாடி
வதங்கும் நிலமைதனைப் பாராயம்மா
வந்து நல்ல வாழ்வினையே தாருமம்மா

அண்டமுதல் எண்டிசையும், ஆட்சிகொள்ளும் நாயகியே
ஆறுதலை எங்களுக்குத்தாருமம்மா!
ஆச்சியரே எங்கள் துயர் தீருமம்மா

வாழ்வுபல இழந்து, மக்கள் உயிரிழந்து
ஏழ்மையிலே வாடுகிறார் பாருமம்மா
சுஸ்வரியே இத்துயரைத் தீருமம்மா

பாதகங்கள் தீர்ந்திடவும், பஞ்சம் அகன்றிடவும்
நீதுபல நீங்கிடவும் செய்யுமம்மா
பாதமலர் பணிந்தோம்நாம் வாருமம்மா

செல்வம் பெருகவேண்டும், திமையகலவேண்டும்
நல்விழவு காண வேண்டும் நாயகியே
நாடுதுயர் நீங்கவேண்டும் ஆதரியே.

பொதுகை நூலகம்

தாலாட்டு - 1

அரனுரின் பாகமர்ந்த சிவமுத்துமாரி - தாயே
அகில பரமேஸ்வரியே சிவமுத்துமாரி

ஆதியாய் நீயுறைந்தாய் சிவமுத்துமாரி - தாயே
அண்டமெல்லாம் காத்திடுவாய் சிவமுத்துமாரி

இன்னல்கள் வாராமல் சிவமுத்துமாரி - அம்மா
எங்களை நீகாத்திடுவாய் சிவமுத்துமாரி

ஈஸ்வரியே அம்மையரே சிவமுத்துமாரி - அம்மா
ஈன்றவளே காத்திடுவாய் சிவமுத்துமாரி

உந்தன் அருள் கிடைத்தால் சிவமுத்துமாரி - தாயே
வந்தவினை ஓடிவிடும் சிவமுத்துமாரி

ஊழ்வினைகள் கோதாரி சிவமுத்துமாரி - தாயே
உன்னருளால் மாறுமம்மா சிவமுத்துமாரி

எல்லையில்லாத் துன்பமெல்லாம் சிவமுத்துமாரி - அம்மா
ஈஸ்பரியே காத்திடுவாய் சிவமுத்துமாரி

ஏகமாய் நிற்பவளே சிவமுத்துமாரி - அம்மா
எங்கள் துயர்தீருமம்மா சிவமுத்துமாரி

ஐயனர்தேவியரே! சிவமுத்துமாரி - தாயே
எய்தவினை தீருமம்மா சிவமுத்துமாரி

ஒருவினையும் வாராமல் சிவமுத்துமாரி - தாயே
உத்தமியே காருமம்மா சிவமுத்துமாரி

ஓடிவிடும் துன்பமெல்லாம் சிவமுத்துமாரி - அம்மா
உந்தனது நாமம் கேட்டால் சிவமுத்துமாரி

ஔடதங்கள் தேவையில்லை - சிவமுத்துமாரி - அம்மா
அங்கயற்கண்பார்வை போதும் சிவமுத்துமாரி

தாலாட்டு - 2

வேறு

கன்னனூர் நாயகியே - தாயாரே - ஈஸ்வரியே
கடியவினை தீருமம்மா

காரண சவுந்தரியே - தாயாரே - ஈஸ்வரியே
காருமம்மா மக்கள் தன்னை

கிட்டிவரும் நோய்பிணிகள் - தாயாரே - ஈஸ்வரியே
எட்டியே ஓடவைப்பாய்

கீர்த்திபல கொண்டவளே - தாயாரே - ஈஸ்வரியே
கிருபை செய்வாய் மக்களுக்கே

குற்றம் பொறுத்தருள்வாய் - தாயாரே - ஈஸ்வரியே
குறையெல்லம் நீ பொறுப்பாய்

கூற்று அணுகாமல் - தாயாரே - ஈஸ்வரியே
குவலயத்தைக்காருமம்மா

கெட்டபிசாசையெல்லாம் - தாயாரே - ஈஸ்வரியே
எட்டி உதைத்திடுவாய்

கேடுபலசேராமல் - தாயாரே - ஈஸ்வரியே
கிருபை செய்வாய் மக்களுக்கு

கையிற்குளை எடுத்து - தாயாரே - ஈஸ்வரியே
காத்திடுவாய் மக்களையும்

கொள்ளை நோய்வைசூரி - தாயாரே - ஈஸ்வரியே
குவலயத்தால் மாறவைப்பாய்

கோதாரி, காசமெல்லாம் - தாயாரே - ஈஸ்வரியே
கோதையரே!, மாற்றிடுவாய்

கௌவவரும் துன்பமெல்லாம் தாயாரே - ஈஸ்வரியே
காரிகையே! நீக்குமம்மா.

பின் இணைப்பு

ஓலைச்சுவடிகளில் இருந்து பிரதி செய்யப்பட்டன

1. கண்ணகை அம்மன் குளிர்த்தி
2. மாரிஅம்மன் குளிர்த்தி
3. கண்ணகை கலியாணக்கால் சுற்றுக்காவியம் என்பன.

நூல் ஆசிரிய

கண்ணகை அம்மன் குளிர்த்தி

—○●○—

சீர்பொருந்தும் ஐங்கரனே! திருமாலின் மருகோனே
கார்பொருந்தும் யானைமுகக் கணபதியே சுற்பகமே
பார்பொருந்தும் கண்ணகையார் பழிவாங்கிக்குளிந்த கதை
னார் செழிக்கப்பாடுகிறேன் ஒரு பிழையும் வராமல்

ஒருபிழையும் செய்யாத உலகு புகழ் கோவலரைப்
பெருமழுவால் கொல்லுவித்த பெருமாறன் தனையெரித்துக்
கருதரிய ஆயர்மனை கனல் மூழ்கச் சாபமிட்டு
இருமூலையும் குளிந்த கதை யானுரைக்கக் காரணமே.

நடை

காரணியும் கொடைவாழ்வணிகர்
காதல் மிகுத்ததோர் பாலகனார்

சீரணியுந் திரு மாமணி நங்கை
செல்வி குலத்துயர் தோன்றினளே

மன்னுயர்மாநாகர் தன்மகளார்
மாசாத்துவார்க்கு மருமகளார்

பொன்னுளது மாதவிக்குத் தோற்றுப்
போகைக் கிசைந்தார் கணவரோடே

கொஞ்சிய செஞ்சோற் கிளிப்பிள்ளை தன்னைக்
கொண்டு சென்றங்கவர் கையிற் கொடுக்க

வஞ்சகர் நெஞ்சில் வளருமென்றே
வந்தாரே கோவலர் முன்பு செல்ல

நீதறுகாதம் பலகூடந்து
நிறைந்த கவுந்தியோடங்கிருந்து

மாசறு வல்வினை நீரவென்று
மனையறிவோ மெனப் போயினரே

வைகைக் கரையில் இனிதிருந்து
மாது வணிகரும் தாழ்ந்ததன்றே

தையல் வருந்தக் கவுந்தியனுரும்
தார்வணிகர்க்கொரு தீங்கிலையென்றார்

110526

ஐயனே உந்தன் அடிபணிந்து
ஆதுளர்சேரி குளிரவென்று

வைகாசித் திங்கள் வருவேனென்று
மதுரைக்கிசைந்து விடைகொடுத்தாரே

அன்னம் குருகு புறுவினங்கள்
அவைதுணையாக இருந்தபோது

பொன்னின் மணிச்சிவிகைதனிலேறிப்
போந்து இடையர் தெருபுகுந்தாரே

முதிரும் பழவினை மூண்டலுமே
மொய் குளலார் தமையங்கிருத்தி

மதுரை புகுந்து சிறிது நாளில்
வாணிபம் செய்வோம் எனநினைந்தாரே

சுண்ணகிகாற் பொற்சிலம்பது கொண்டு
கருத்துடன் நல்லோர் கடைபுகுந்தாரே

எண்ண மொன்றறியாத கோவலனுரும்
ஏறுப் லிலேயேற்றம் சொன்னவாறே

விற்கும் சிலம்பு விலை பெரிதென்று
வேளாளர் கொள்ளாமல் மீண்டும் போந்த

தர்க்கும் பெரியதோர் தட்டானுர்குத்
தன்னகச் சிலம்பொன்று காட்டினரே

நிற்க இவ்வாசலில் நிற்கவென்று
நீணிலை வேந்தர்க்கெடுத்துரைக்க

கொற்றச் சிலம்பொடு கல்வனரைக்
கொடுவந்து நின்று விளவினரே

மாற்றமொன்றறியாத மன்னவனுரும்
வணிசனைக் கொல்வோமென நினைந்தாரே

குற்றமொன்றறியாத கோவலனுரைக்
கொடு மழுவாலே பிளப்பித்தாரே

காதலன்பட்ட கடுந்துயரம்
கனவிலே கண்டு கருங்குளலார்

மாதவம் செய்து தவம் புரிந்து
மதுரை அழிப்போம் என நினைந்தாரே

மேலான தோழியும் மாதுரியும்
மெல்லி நல்லார் தமை அங்கிருத்தி

தூய மொழியாரே நீ சொன்ன மாற்றம்
தொல்லுல கோர்க்கு முடியாதென்றார்

மாதுரை கேட்டுமனங்கலங்கி
மன்னவன் வாசல் அருகு சென்று

கூறு வேரூன உடலைப் பொருத்திக்
கொம்பனையாள் உயிர் மீட்டுக்கொண்டு

பாண்டியன் செய்த பழிகள் பாவம்
பார் மேலெழுந்த பழிமதுரை

மூண்டவடவகனல்தனை மூட்டி
முளக்காயெரித்தாளே மொய் குளலாள்

தானுமாதோழியும் மாதுரியும்
தன்னிலொன்றுகிய தார் கோதையும்

வானோர் எதிர் கொள்ள வையகமுய்ய
மங்கை மகிழ்ந்துல கேறினளே

ஆறி நடந்தாள் அணியிளையாள்
ஆனதிருப்பதி வாசலூடே

தேறி நடந்தாள் திருமாமணி நங்கை
செல்வி திருப்பதி வாசலூடே

சுந்தஞ் சொரியுங் கனங் குளலார்
கணவனுடன் பிரியாதவாறே

இந்தவணிசனிடர் நீரவென்று
ஏந்திளை அம்மானை ஆடினரே

பூந்தடங்கண்ணியர் தாம்புடை சூழப்
பொன் அனையார் தமை அங்கிருத்தி

கூந்தல் மடமயில் சாயல் நல்லாள்
கோதை நின்றம்மானை ஆடினரே

போரான வேல்விளி பொன் அனையாள்
புவனமுழுதும் புரிகுளலாள்

ஆரணமேத்த அருமறை ஓத
ஆயிளை அம்மானை ஆடினரே

சித்தங்கலங்கவே தென்னவன் கூடலைத்
தீக் கொண்டு சுட்டுச் சிறப்பை அழித்து

பத்தினியென்று பலபேரும் போற்றப்
பைந்தொடி அம்மானை ஆடினரே

விற்புருவ வேல்விழி மின்னேயார்
மேதினியெங்கும் குளிர்ந்துவாழ்க

கற்புடையாள் என்று சொற்படைத்த
காரிகை அம்மானே ஆடிளுரே

கொந்து செறிந்த குழலசையக்
குவலயம் எங்கும் குளிர்ந்து வாழ்க

அந்தரவானத் தரம்பையர் போற்ற
ஆயிழை அம்மானே ஆடிளுளே

நான் மாறன் கூடலில் நான் மறை ஓத
நாற்றிசை எங்கணும் கொண்டவேந்தன்

கோமாறன் தன்னேக்கொலே வினேத்த
கோதை நின்றம்மானே ஆடிளுளே

ஆலிலே போலும் அணிவயிற்ருள்
அங்கயற் கண்ணுடை ஆயிளோயாள்

சாலிவிளேய மழைபொழியத்
தார் கோதை அம்மானே ஆடிளுரே

பாங்குபுகழ்செறி தார்கோதையும்
பத்தினிமார், தெய்வ கன்னியர்தாமும்

பூங்கமலத்திருமாமணி நங்கை
பொன்னின் அம்மானே புரிந்தாடிளுரே

கன்னியர் தங்கள் மனேவிளங்கக்
கற்றவர் தங்கினே வாழவென்று

சென்னிவளவன் தன்மாநகரில்
சேயிழை அம்மானே ஆடிளுரே

கைமானே ஏந்திய காரிகையார்
கண்டு மகிழ்ந்து கனங்குளலார்

அம்மானே ஏந்திய அங்கயற் கண்ணி
அம் பொற்சிலம் பொலி எம்தலேமேலே

வேறு

ஒருமாப் பத்தினிவந்தாள், உலகேளும் தழைத்திட
வந்தாள், வந்தாள்

திருமாணி நங்கை வந்தாள் எங்கள் தேசம்
தழைத்திட வந்தாள் வந்தாள்

இப்பாரிடந்தனில் வந்தாள்: இடைச் சேரி தழைத்திட
வந்தாள், வந்தாள்

ஒப்பான பாலகர்க்கன்பாகவே, ஒருமாப் பத்தினி
வந்தாள், வந்தாள்

வீருடும் பத்தினி வந்தாள் - விளேயாடும் வீதியில்
வந்தாள், வந்தாள்

மாருன பாண்டியன் மாள வென்று
வலமான கொங்கை அரிந்தாள் வந்தாள்

பாராளு மென்மொழி வந்தாள்
பரிந்தோர்கள் தன் கினே தாங்க வந்தாள்

மேலான வேல் விழி வந்தாள்
விளேயாடும் வீதியில் வந்தாள்

கொற்றவன் முன்னுள் பிழந்து போட்ட
கோவலர் அங்கத்தைக் கூடக் கூட்டி

மற்றவன் செய்த விபரம் கேட்டே
மாது நல்லாளிவன் வந்தாள், வந்தாள்

ஆணிப்பொன்னுலே அமைத்த சிலம்பை
அங்கம் வருந்த முறித் தெறிந்து

மாணிக்கம் காட்டி வளக்கு வென்ற
மாது நல்லாளிவள் வந்தாள், வந்தாள்

ஆதுலர் தம் கினே வாழ வென்று
ஆதிரை நாள் வந்துதித்தாள் வந்தாள்

காவலன் செய்த கடும் பிழைக்குக்
கனலிப் பரப்பி மதுரை எரித்து

ஏற்றம் மிகுந்ததோர் பாண்டியன் தன்னே
இழுக்காடி வென்றவள் வந்தாள் - வந்தாள்

மாற்றம் மிகுந்ததோர் மன்னவன் தன்னே
வளக்காடி வென்றவள் வந்தாள், வந்தாள்

காணுரும் மாலே குளல் சரிய
காடும் சுனேயும் பல கடந்து

மீனவன் செல்வம் அழித்த கோவம்
வெஞ்சபர் வேல் விழிமாதே ஆருய்

கற்றலர் தன் கினே வாழவென்று
காவினி யெங்கும் குளிந்து வாழ்க!

கொற்றவன் செல்வம் அழித்தகோவம்
கோலமழகிய மாதே ஆருய்

கொஞ்சு பரிபுரத்தாளிணை நோகக்
கோவலரோடு மதுரையில் வந்து

பஞ்சவன் செல்வமழித்த கோபம்
பாலாருமென் மொழி மாதே ஆருய்

வாடாத பூங்குளல் சோரநடந்து
வஞ்சியரோடும் மதுரையில் வந்து

கூடலன் செல்வம் அழித்த கோவம்
கோலமழகிய மாதே ஆருய்

விழிகள் இரண்டும் அனல்சொரிய
வேகத்துடனே மதுரையில் வந்து

வழுதி மதுராபுரி அழித்த கோபம்
வஞ்சமர் வேல்விழி மாதே ஆருய்

ஆமல்ல என்று ஆராய்ந்து பாராமல்
அப்பொழுதே செட்டியை வெட்டுவித்த

சோமகுல மன்னன் தனில் கொண்ட கோபம்
தோகை மயிலனையாரே ஆருய்

சித்தங் கலங்கி வணிகேசன்பட்ட
கனங் கண்டுளத்தே சினத்தை அடக்கி

சந்திரகுல மன்னன் தனக்கொண்ட கோபம்
சாய மயிலினையாரே ஆருய்

வேறு

காளி புடை சூழக் காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ் வணிகர் தம்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்

இமா வேம்பின் கீழே இருந்து வருந்தாமல்
வளமை பெரிதுடையமாதே குளிர்ந்தருள்வாய்

மீகாமனுக்கு மிகுந்தவரம் கொடுத்து
நாகமணி வாங்க நயந்தாய் குளிர்ந்தருள்வாய்

சொற் பெரிய மாநாகர் துய்ய குலத்தே உதித்துச்
சர்பமணித்தான் அணிந்த தாயே குளிந்தருள்வாய்

மாதவிக்குப் பொன்தோற்று வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் போனதொரு கன்னிகுளிர்ந்தருள்வாய்

காவிரிப் பூம்பட்டினத்தைக் கைவிட்டகன்றபின்பு
பூவிரியும் சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்

சாற்றரிய தக்க கவுந்தியனர் தன்னுடனே
பூத்தமலர்ச் சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்

ஓடத்திலேறி உயர்காவேரி தான் கடந்து
தேடரிய தென்மதுரை சென்றாய் குளிர்ந்தருள்வாய்

கொக்கினமும் புள்ளும் குரலோசையும் கேட்டுத்
தக்கவழி நடந்த தாயே குளிர்ந்தருள்வாய்

தென்னம்பழம் சொரியத் தேமாங்கனி உதிர
வன்னிவழி நடந்த மாதே குளிர்ந்தருள்வாய்

கொற்கைப் பதிதனக்குக் கோவலனுர் பின்பாக
துர்க்கைப்பதி நடந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்

மடைமீதிற் கயல்பாயும் மதுரைமாநகரமதில்
இடையர் அகம்புகுந்த ஏந்திளை குளிர்ந்தருள்வாய்

பூட்டிக்கிடந்ததொரு பொற்சிலம்பைத்தானெடுத்து
செட்டி கோவலார்பின்னே சென்றாய் குளிர்ந்தருள்வாய்

மற்பொலியுந்தோளான் வணிகர்தமைக் கொன்றகதை
சொப்பனத்திற் கண்டதொருதோகாய் குளிர்ந்தருள்வாய்

சேரக்கனவைத் திரும்ப இடைச்சிக் குரைத்து
சீர்மதுரை உள்ளாகச் சென்றாய் குளிர்ந்தருள்வாய்

தன்கணவன் பட்டகளம் தேடித்தான் நடந்து
அன்புடன் சென்றருயிரை மீட்டாய் குளிர்ந்தருவாய்

தட்டான் முன் கொல்லுவித்த தலிவரவரைக்கண்டு
பட்டீரோ? என்றழுத பாவாய் குளிர்ந்தருள்வாய்

கூறும் மொழியும் குரலோசையும் கேட்டு
ஏறும் விமானத் தெழுந்தாய் குளிர்ந்தருள்வாய்

மன்னிய வேகத்தை மனத்துள்ளே தானடக்கித்
தென்னவன் தன் வாசலிலே சென்றாய் குளிர்ந்தருள்வாய்

நீதறியாக் கோவலனைத் தென்னவனும் வெட்டுவித்த(து)
ஏது குறையாக எண்ணாய் குளிர்ந்தருள்வாய்

வாளை எடுத்து வலமுலையைத்தானரிந்து
தோளாடையாகத் துணித்தே எறிந்தாயே

ஏழுகதவோடி அடைத்தாதே பாண்டியனும்
ஏழுகதலூடுருவி மார்புருகத் தைத்ததுவே

பண்டைப்பழியெனவே பாண்டியனும் போய் விழுந்தான்
கொண்டாரே கண்ணகையார் கோவலனைக் கொன்றபழி

தட்டான் பொடியாகத் தார்வேந்தன்நீருகச்
சுட்டழித்துப் போட்டதொருதோகாய் குளிர்ந்தருள்வாய்

எல்லைப்படும் பழிக்கு எண்ணவொண்ணாப்பழிவாங்கி
சொல்லரியமாமதுரை சுட்டாய் குளிர்ந்தருள்வாய்

மதுராபுரித்தெய்வம் வாய்மாற்றம் தான் கேட்டுச்
சதுராகவேகம் தணிந்தாய் குளிர்ந்தருள்வாய்

ஆயர்குலப்பாவாய் எம் அன்னமே தார்கோதாய்
தூயவன்தன்சேரி சுடாதே குளிர்ந்தருள்வாய்

எச்சேரிவேகினும் இடைச்சேரிவேகாமல்
பட்சேரிவேகினும் பறைச்சேரிவேகாமல்

என்றீது செய்த இயல்மாறன் மதியழித்து
உன்முலை குளிர்ந்தாப்போல் நீயும் குளிர்ந்தருள்வாய்

மதியோடு செய்தவியல் மாறன்பதியழிக்கப்
பொதுவர் இடந்தனிலே போனாய் குளிர்ந்தருள்வாய்

அரிந்தமுலையால் அவர்பழியும் தான்வாங்கி
புரிந்தாயர்தன்பதியில் போனாய் குளிர்ந்தருள்வாய்

விரைந்துமலைபுகுந்து வெண்ணெய் தினை அள்ளிவந்து
அரிந்தமுலைதனிலே அங்கவளும் அப்பினளே

கோவலரை நீங்காத கொம்பேகுளிர்ந்தருள்வாய்
வாராய்; புருவே வளர்மதியைக்கை தொழுவோம்

ஓதாய் புருவினமே ஓம் நமசிவாய வென்று
கோலப்புருவே! கொடுவாராய் வெற்றிலையே

மாடப்புருவே வளர்காலி வெற்றிலையே
அன்றலைய நோய்பிணிகள் இன்றே அகன்றோட

நன்றாய் விமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
கூலது கடந்து கோவலரைத்தான் கூட்டி

ஏறும்விமானத்தெழுந்தாய் குளிர்ந்தருள்வாய்
தன்கணவன் பட்டதிசையினைத்தும் தான்கடந்து

பொன்னுலகம் வீற்றிருக்கப்போனாய் குளிர்ந்தருள்வாய்
தேவர்களெல்லாம் திருவாணத்தேரேறி

சுற்பதித்த தூண்போல் கலங்கார் மதியினையார்
நெற்பதித்த தூண்போல் நெருங்கார் மதியினையார்

தேடரிய இக்கதையைச் சிந்தைதனிலுணர்ந்து
பாடினோர் வாழி, படித்தோர்கள்தான் வாழி
தேனுரும் செஞ்சொற் சிலம்பதிகாரக்கதையை
ஏனாளும் போற்றி இனிதூழி வாழ்வாரே
என்றேபுகழ்படைத்த இந்தப்பெரும் கதையை
இன்றுள்ளோர் என்றும் இனிதூழி வாழ்வாரே
ஆல்போல் தழைத்து அறுகது போல்வேரோடி
மூங்கிற் போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
கன்றுபொலியக் கறவையினம் உண்டாக
மண்டலத்தில் என்றும் மகிழ்ந்தூழி வாழ்ந்திருப்பார்
வேண்டி இருப்போர்கள் மென்மேலும் வாழியவே
வாழிய! வாழிய!! வாழியவே!!!

மங்களம்

சிறிமங்களம், சிவமங்களம், சிவசிவா சிவமங்களம்
செந்தாமரை வருமாதேவியே சிவமங்களம்

அட்டலெட்சுமி ஆதிகண்ணகை அம்மனேதிருமங்களம்
ஆதிசோதி, அகோரகாரணியம்மனே திருமங்களம்

துட்டநிக்கிரக சிட்டபரிபாலன சோதியே சுபமங்களம்
துறவர், நரர்பலர் மகிழவரமருள் தோகையேதிருமங்களம்

பெட்டகத்திடை நதியில் ஏகிய - பேதையே திருமங்களம்
பெருமைசெறி குலவணிகர் மனைவளர்பெண்கொடிதிருமங்களம்

வட்டமாநகர் தழையவருள்புரி வஞ்சியே திருமங்களம்
மாறன் மதுரையை நீறுசெய்தருள் மங்கையேதிருமங்களம்

விண்ணவர் சபைமிசைநண்ணிய சாபம் விதித்தவிதிப்படியே
விறல்மிகுவழிநி தன்நுதல் விழிபொடிசெய்த மெல்லியல் குளிர்வாயே

கண்ணனெடுலகருள் அண்ணலும் அடிதொழு - பண்ணவர்கனி மொழியாய்
கண்ணுதலுமை திருவண்ணல் தன்அருள்பெறு - கண்ணகை குளிர்வாயே

தண்ணெழில் முகில், மழைபெய்திடையர்கள் பதி - தழலெரி கொழுவாது
தத்துவவரமருள் உத்தமியாகிய - சக்தி குளிர்வாயே

வண்மைகொள்வணிகனே - எண்ணமில்வாதுயர் மாறன்வதைத்திடவே
மாநிலம் மகிழ்வுற வாதுமுடித்தருள் - மானே குளிர்வாயே

ஆணிலுமழகுள்ள நீள்வணிகேசனே - அரும்வதை செய்திடவே
மாநிலமகிழ்வுற வாதுமுடித்தருள் - மாது குளிர்வாயே

உ

மாரியம்மன் குளிர்த்தி

—○●○—

திருமருவுங்கரிமுகனே! சிலை வேலை நகர்வாழும்
மருமருவும் மகமாரி வனிதை குளிர்ந்திடுகாதை
தருமருவு தமிழ்பாடத் தந்திமுகத் தைங்கரனே!
ஒருபிழையும் வாராது உனதுபதம் தனை மறவேன்.

மறவாமல் அனுதினமும் மகமாரி அம்மைதன்மேல்
விறல்மேவு தமிழ்பாட வினையொன்றும் வாராமல்
குறைதீர உமதருள்செய் குவலயத்தில் மானிடர்க்கு
கறைமிடற்றண்ணல் மகவே! கருணைபுரி கதிர்வேலே,

நடை

பூவிலுதித்த புவனதயாபரி - பூவையே உந்தன் மனதே இரங்கி
தாவிய வெப்பு வைசூரியகற்றி - தாயே உன்கோபம் தணிந்தருளம்மா

மாவடுவாகியஞானதயாபரி - மாதாவே! உந்தன் மனதேயிரங்கி
பூவுலகெங்கும் புதுமைகள்காட்டிப் - பூவையே கோபந்தணிந்தருளம்மா

கற்பகமேவிய சொற்கிளியாளே - கன்னியே உந்தன் மனதே இரங்கி
இப்புவியோர்களிடுக்கணகல - எந்தாயே கோபம் தணிந்தருளம்மா

தாவரசங்கமதாகியிருக்கும் - தாயே உனது மனதே இரங்கி
நாவில் மறை அருள் கூறருள்தாயே - நாரணிகோபம் தணிந்தருளம்மா

நாதரி, அந்தரி, ஞானதயாபரி - நம்பியமானிடர் துன்பமகற்றி
பூரணகும்பந்தனிலுறைமாரி - பூவையே கோபம் தணிந்தருளம்மா

அஞ்சலி செய்து அருட்கண்பரப்பி - அம்மனே! உந்தன்மனதே இரங்கி
நெஞ்சில் நிறைந்து நடம்புரிதாயே - நித்தமுன்கோபம் தணிந்தருளம்மா

ஆகமவேதமனைத்துமளித்து - அம்மனே! உந்தன் மனதே இரங்கி
நாகமணிப்பணி பூணுமென்தாயே - நாரணி! கோபந்தணிந்தருளம்மா

பஞ்சாட்சரத்திற் பழம் பொருளாகிய - பாவையே
உந்தன்மனதே இரங்கி
நெஞ்சில் கவலை தொலைத்தருள்தாயே - நித்தமுன் கோபந்
தணிந்தருளம்மா

சுந்தரமேவிய செந்திருநாயகி - துற்கனை வென்றருள் கற்பகமாரி
அந்தரமேவி, அருந்தவசாகி - அம்புவி வாழ்விக்க வந்தாள், வந்தாள்

காரணசுந்தரி நாரணன் தங்கை - காமனை வென்றகருணாகரத்தி
தாரணிமானிடர் நோய்பிணிமாற்றச் - சத்ய தயாபரி
வந்தாள் வந்தாள்

பொன்னுல கோர்கள் புதுமலர் தூவப் - புட்பவிமானத்தை
விட்டிறங்கி
தென்னிலங்காபுரி வீதிமீது - தெய்வசிகாமணி வந்தாள், வந்தாள்

கன்னியர் செம்பொற்கவரி வீசக் - காவலர் பாதம் தனை வணங்க
இந்நகர் மானிடர் நோய்பிணிமாற்ற - ஏகபராபரி வந்தாள், வந்தாள்

முக்கோணசக்கரத்துட் பொருளாகி - முன்னவன்பாகத்தை விட்டிறங்கி
செக்கர் முகிலளகக்குழல்சோர - செந்திரு நாரணி வந்தாள், வந்தாள்

பட்டமரங்களிலை தளிர்க்கப் - பாலைமரங்கள் பழம்சொரிய,
துட்டர்குலத்தினை வெட்டி அழித்த - துய்யபராபரிவந்தாள், வந்தாள்

வாழை, பலாக்கள் பழம் சொரிய - மல்லிகை புன்னைகள் பூச்சொரிய
வேளை எரித்தமலர்க்கண்பரப்பி-மேதினி வாழ்விக்க வந்தாள், வந்தாள்

பக்திசெய்வோர்க்குப் பரகதி நல்கி - பஞ்சமாபாதகவஞ்சரைமாய்த்து
சித்தம்மகிழ்ந்து செகதலம்வாழச் - செந்தமிழ் நாயகி வந்தாள்,
வந்தாள்

வாரிவிழைய மழைபொழிய - வையகமேழும்மகிழ்ச்சி பொங்க
கூரிய ஞான அருட்கண்பரப்பிக் கொம்பனைவீதியில் வந்தாள், வந்தாள்

வேதியர் வேதமறைபடிக்க - விண்ணுலகோர்கள் பதம் பிடிக்க
சோதிமயிலினை ஒத்தசாயல் - சுந்தரிவீதியில் வந்தாள், வந்தாள்

நாயகிசையினில் தீர்த்தமள்ளி - நானிலமெங்கும் குளிர்வதாக
நேயமதான கிருபைகள்நல்கி - நேரினை வீதியில் வந்தாள், வந்தாள்

சோதிசிவந்த சுடர்க்கண்பரப்பி - சூழ்வினைபேதிதொலைக்கவெண்ணி
பாதிமதிநதி சூடியோன்நாயகி - பார்வதிவீதியில் வந்தாள், வந்தாள்

சந்திர சடாட்சரிவந்தாள் - சதுர்வேதநாயகி வந்தாள்; வந்தாள்
செந்தமிழ்நாயகி வந்தாள் - சிவகாமசுந்தரி வந்தாள்; வந்தாள்

வாதாடும் பத்தினி வந்தாள் - மதுராபுரந்தனில் வந்தாள், வந்தாள்
சூதான பாண்டியன்மாளவென்று-சுடர்முலைதன்னையரிந்தாள் வந்தாள்

சங்கைச்சடைச்சியர் வந்தாள் கயிலாயபார்வதி வந்தாள், வந்தாள்
மங்கையர்நாயகி வந்தாள் - மகமாரி அம்பிகை வந்தாள், வந்தாள்

வெண்ணீறு கொண்டு வினையறுக்கும் - வீரதயாபரி வந்தாள், வந்தாள்
கண்ணூறு வெப்புக்கவலை தொலைக்கும் - காரணசுந்தரி வந்தாள், —
வந்தாள்

சாலோக பத்தினி வந்தாள் - சதுராடும் நாயகி வந்தாள், வந்தாள்
பூலோகமானிடர் நோய் பிணிநீக்க - பூரணசுந்தரி வந்தாள், வந்தாள்

இப்பாரிடந்தனில் வந்தாள் - இடைச்சேரிவாழ்விக்க வந்தாள், வந்தாள்
ஒப்பானமாறன் உயிரழித்த - ஒருமாப்பத்தினி வந்தாள், வந்தாள்

பூலோகமெங்கும் புதுமைகள்காட்டி பூரணசுந்தரி வந்தாள், வந்தாள்
சாலோக நாயகிவந்தாள் - சதுராடும் அம்பிகை வந்தாள், வந்தாள்

பூமேவுபத்தினி வந்தாள் - புவியேழும் தழைத்திட வந்தாள், வந்தாள்
காமேவுநாயகி வந்தாள் - கைலாயம் தனிவிட்டு வந்தாள், வந்தாள்

பொன்னகர் வீதியில் வந்தாள் - புவிபார்க்கவென்றிங்கு வந்தாள், — வந்தாள்
தென்னிலங்காபுரி வந்தாள் - தெருபார்த்துவாழ்விக்க வந்தாள், — வந்தாள்

முத்தாடும் பத்தினி வந்தாள் - முழுலோகம் வாழ்விக்க வந்தாள், வந்தாள்
பத்தாதபத்தினி வந்தாள் - பரலோகம் வாழ்விக்க வந்தாள், வந்தாள்

சுத்ததயாபரி வந்தாள் - துயர் நீர்க்கும் நாரணி வந்தாள், வந்தாள்
சத்திய நாயகிவந்தாள் - சைவம் தானே தழைத்திடவந்தாள், வந்தாள்

தெய்வ தயாபரிவந்தாள் - சிவலோக காரணி வந்தாள், வந்தாள்
வையகமேவி வைசூரியகற்றி - வாழ்விக்கும் நாரணி வந்தாள், வந்தாள்

அம்மானை ஆடல்

பூவுலகெங்கணும் ஓர் உருவாகிப்
பூமகள் பாரம் தொலைக்கவென்று
தேவுலகோர்கள் நற்பூமலர் சிந்தத்
தேவி நின்றம்மானை ஆடினளே

வையகமெங்கும் மனுப்பெருத்து
வஞ்சகம், பொய்யும் அதிகரித்து
தெய்வம் மறந்த திறத்தினுலே
தேவிமுத்தம்மானை ஆடினளே

பாதகர் நெஞ்சிற் பயங்கொடுத்து
பத்தி செய்வோர்க்கு நல் முத்தியளித்து
மேதினி எங்கும் பரிகலம் சூழ
மெல்லி முத்தம்மானை ஆடினளே

துட்டர், சபடர் துடுக்கை அடக்கி
துர்ச்சனர், பாதகர்க் கச்சம் அளித்து
மட்டற நின்று குழல்சரிய
மாரி முத்தம்மானை ஆடினளே

தாவரசங்கமதாகி இருந்து
தாரணியெங்கணும் முத்தெறிந்து
பூவிலெழுந்த புராதனி! நாரணி!
பொற்கொடி அம்மானை ஆடினளே

கூர்விழி நீட்டிய மைகரையக்
குங்குமக் கொங்கைக் குடம்சரிய
பாருலகெங்கும் நிறைந்த தயாபரி
பத்தினி அம்மானை ஆடினளே

வஞ்சகர் நெஞ்சில் மதத்தை அடக்கி
வாய்மத காரரை எச்சரித்து
நஞ்சணி கண்டத்து நாரணன்தங்கை
நாயகி அம்மானை ஆடினளே

பூதலமெங்கும் புதுமைகள் காட்டிப்
பொல்லாத வஞ்சகர் தங்களே வாட்டிச்
சோதிடமேவிய சுந்தரி, துர்க்கை
சுந்தரி அம்மானை ஆடினளே

தென்மதுராபுரிநீயெழச் சுட்டு
செட்டிகுலத்தில் அவதரித்துத்
தன்கணவன் துயர் தன்னே மூடத்
தையல் நின்றம்மானை ஆடினளே

ஐயனுரைத்த அருள் மொழிகேட்டு
அந்தரமேவிய துர்க்கனே வென்று
வையகமெங்கும் வைசூரி அழித்த
மாரி நின்றம்மானை ஆடினளே

ஐஞ்செழுத்துள்ளே அருமறை கூறி
ஐயன் கயிலை தனில் தவசாகி
நஞ்சணி கண்டனே நெஞ்சில் நிறுத்தி
நாயகி அம்மானே ஆடிளுளே

நச்சரவுச்சி தனில் நடித்து
நாரணன் தங்கை என வளர்ந்து
பச்சைமயிலினே ஒத்த சாயல்
பைந்தொடி அம்மானே ஆடிளுளே

கன்னியர் வந்துமலர் சொரியக்
காவலர் பொன்னடி மேல்வணங்கு
பொன்னடிநோவ இடை வருந்தப்
பூவை நின்றம்மானே ஆடிளுளே

ஆயர்குலத்தில் அவதரித்து
ஆயிழை மார்கள் அருகில்வந்து
துயநறு நெய்யைக் கையிலள்ளிச்
சுடர்முலைக் கொங்கையில் அப்பினரே

வேறு

பொன்னுலகம் தன்னி நின்று - பூவுலகத்தே இறங்கி
அன்னமெனவே நடந்த - அம்மே குளிர்ந்தருள்வாய்

காவேரி நாடுவிட்டுக் - காவலனைத்தான்தேடி
பூவேரி மீது வந்த பூவாய் குளிந்தருள்வாய்

காவில் மலர்கள் சிந்தக் - சுற்பகங்கள் தேன்சொரியத்
தாவிவழிநடந்த தாயே குளிர்ந்தருள்வாய்

வேதமறையோர் துதிக்க - வேள்விகளெல்லாம் நழைக்க
சோதிவடிவாகவந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்

அன்னம் நடைக்கொதுங்க - ஆடுமயில் மேற்கொதுங்க
தென்னிலங்கை தன்னில் வந்த தேவி குளிர்ந்தருள்வாய்

ஆனும், புலியும் அருஞ்சுனையில் நீர் குடிக்க
தேன் சொரியும் கானகத்தே சென்றுய் குளிர்ந்தருள்வாய்

மாவில் குயில் கூவ - வாவி எங்கும் பூவிரிய
தாவி வழிநடந்த தாயே குளிர்ந்தருள்வாய்

தென்றல்வந்து தேனிறைக்கச் - செண்பகங்கள் பூவிரிய
கண்டுவழி நடந்தகன்னி குளிர்ந்தருள்வாய்

தாமரைகள் பூவிரியச் - சந்தனங்கள் தேன்பிலிற்ற
காமருவு கானகத்தைக் கண்டாய் குளிர்ந்தருள்வாய்

வாழை பழம் சொரிய - வான்கமுகு தேன் சொரியத்
தாழை வனம் புகுந்த தாயே குளிர்ந்தருள்வாய்

செந்நெல் வயல்விளையச் - செந்தினைகள் பூவிரிய
வன்னிவழி நடந்த மாதே குளிர்ந்தருள்வாய்

பட்டமரம் பால்சொரியப் - பச்சைமரம் பூவிரிய
வட்டை சுற்றிப் பார்த்துவந்தமாதே குளிர்ந்தருள்வாய்

காவேரிபொங்கக் - களனிகளிற் பொன்விளையப்
பூவேரி தன்னில்வந்த பூவாய் குளிர்ந்தருள்வாய்

அந்தி, சந்தி உன்பதத்தில் - அன்பு வைக்கும்மானிடர்க்கு
வஞ்சவினை துஞ்சவருள் மாதே குளிர்ந்தருள்வாய்

மாதவிக்குப் பொன் குறைந்து - வாட்டமுற்ற கோவலர்க்கு
பாதச்சிலம் பளித்த பாவாய் குளிர்ந்தருள்வாய்

கோவலனைக் கொல்லுவித்த - கோபம் தணியவென்று
பூமதுரை நாட்டில் புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்

மாறன் தனை அழித்து மாமதுரை தீயெரித்து
வேறு வழியாய் நடந்த மின்னே குளிர்ந்தருள்வாய்

தென்னிலங்கைமானிடர்க்குத் - தீராத நோயகலப்
பொன்னுலகம் விட்டுவந்த பூவாய் குளிர்ந்தருள்வாய்

பேதி, வைசூரி - பெரிய நயல் போயகல
சோதி விழிபரப்பும் தோகாய் குளிர்ந்தருள்வாய்

கோபம் தணிந்து - குளிர்ந்த முகமாகிவந்து
போகசுகவாழ்வு தரும் பூவாய் குளிர்ந்தருள்வாய்

பொன்னுலகம் வாழ்க புவிகளெங்கும் தான்வாழ்க
தென்னிலங்கை வாழவந்த தேவி குளிர்ந்தருள்வாய்

பூலோகம் வாழ்க புவியேழும் தான் வாழ்க
சாலோக வாழ்வு தரும் தாயே குளிர்ந்தருள்வாய்

மேகம் மழை பொழிய - மேதினியெல்லாம் விளையத்
தாவுபிணி மாற்றியருள் தாயே குளிர்ந்தருள்வாய்

தேவாலயம் விளங்கத் - தெய்வமறைதான்பரம்ப
கோவாய் வரமுதவும் கோதாய் குளிர்ந்தருள்வாய்

பச்சரிசி அட்சதைகள் - பாதமலர் மேற்சொரிய
அச்சமகற்றி எனை ஆள்வாய் குளிர்ந்தருள்வாய்

வாராய் புருவினமே வளர்மதியைக் கைதொழுவோம்
ஓதாய் புருவினமே ஓம் நமசிவாய வென்று

கோலப்புருவே - கொடுவாராய் வெற்றிலையே
ஆலமெல்லாம் காத்தருளும் அம்மேகுளிர்ந்தருள்வாய்

தாரணியிலென்றும் தருமம் தழைத்தோங்க
பூரணமதான புவிகளெங்கும்தான் வாழி

ஆதிமகமாரி அம்மை அன்புமிகத்தான்வாழி
நீதிமன்னர் செங்கோல் நெறிமுறைகள் தான் வாழி

வேதம் தழைக்கவென்றும் - வெண்ணீறுதான்வாழி
பூதலத்தில் உள்ளதொரு பூவையர்கள் தான்வாழி

பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
ஏடும் எழுத்தாணிகளும் எப்போதும் வாழியவே

ஆல்போல் தழைத்து அறுகது போல் வேரோடி
மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழியவே

மங்களம்

சிறிமங்களம், சிவமங்களம், சிவசிவா திருமங்களம்
அட்டலெட்சுமி, ஆதிபார்வதி அம்மையே சிவமங்களம்

துட்டர் தம் குலம் கட்டறுத்திடு துற்கையே சிவமங்களம்
துய்யமாவினில் வடுவதாகிய தோகையே சிறிமங்களம்

வட்டமாமுலை திருகிநின்ற மடந்தையே சிவமங்களம்
வாரிமீதினில் மகவதாய்வரு வஞ்சியே சிறிமங்களம்

சுட்டு மதுரை எரித்தவீர துரந்தரி சிவமங்களம்
சுடலை மீதினில் நடனமாடிய சோதியே சிவமங்களம்

பட்டதோர்மரம் பால் சொரிந்திடப்பண்ணுவாய் திருமங்களம்
பரவைசூழ் நகர் பிணியகற்றிய பாவையே திருமங்களம்

பண்ணவர் தொழுவரு பெணமுதரசே பார்வதி மகமாரி
பதமலர்தனை மனதினில் மறவாதவர் பவிசுறவரு தாயே

கண்ணகி கலியாணக்கால் சுற்றுக் காவியம்

—○❁○—

காப்பு

வீசுகரமேக நிற வேதமுதல் வாகரட
மேவுமத வாரண விநாயக விணைதா
தேசுருதி மேருவிற் பாரதமிழ் கோடுகொடு
சேமமுறவே எழுது சேர் கருணையோனே!
கூசுமதி சேர் நுதவி கோமளவல்லிக்கோர்
கொஞ்சுமதலைக்கினிய குஞ்சரமுகத்தோன்
பேசு தமிழின் கதைகளே பாடுதற்குமொரு
பிழைகள் வாராமல் அருள் பேழை வயிரேனே!

1. சீர் கொண்டபாரதமருப் பொன்றினுலே
சிகர கிரிதனிலெழுது சித்ரமாமுகிலே
பார் கொண்டமாது பயில் மாலின்மருகோனே!
பதினுபுவனமும் பணியுமைங்கரனே
ஏர் கொண்டவணிகேசர் மாசாத்தார் கோவலர்க்
கினிதாகவே மணமுடித்த கதைபாடக்
கார் கொண்ட வீரமுக்கண்ணனே! விகடதட
சுரிமுகவனே! வந்து காத்தருள் செய்வாயே

2. செவ்வாழை தாவுவயல் சூழ் செந்தியானே!
திருவாலி கேழ்வனே! உருவாறு முகனே!
மைவார் தடங்குறவர் வாழ் சேரி தனிலன்று
வளர்கின்ற வேங்கை மரமாகி நின்றவனே!
மெய்யான வணிகேசர் மாசாத்தார் கோவலர்க்
கியல்பாகவே மணமுடித்த கதைபாட
ஐயா! திருக்கயிலை அம்பதி அமர்ந்துவளர்
ஆயன் மருகனே வந்தடியேன்முன் உதவாய்

3. முன்னுலகமுண்டவர் தமக்கரியமுகிலே
முத்துக்குள் வித்தான முதுமறைப்பொருளே!
மன்னுகடல் நஞ்சை அமுதாக உண்டவனே
மாருடி நற்சுடலை ஆடின்றவனே!
தன்னிகரில்லாத வணிகேசர் கோவலனுர்
நமது கலியாணமது தானுரைத்திடவே
தென்னன்முன்னே நரிபரிக்குதவுவினே
சீராயர்கேழ்வனே ஆராயுமமுதே!

4. ஆராலுமளவிடற் கரிதானபொருளே!
அருமைசெறிமானுகர் மகளானதிருவே!
சுராளர் குலமீது வந்துதித்தவனே!
கண்ணகைத் தாயான கமலபத்தினியே!
பேரான மாசாத்தார் கோவலர் தமக்கும்
பெருமைசெறி கண்ணகைக்கும் மணமுடிக்க
காராலுமுகவனே! மாவின்மருகோனே!
கணபதியே! முன்வந்து காத்தருள் செய்வாயே

5. காத்துமேரெட்சித்து நீகிருபைசெய்து
கருதரிய அரவின்மணி வரவழையுமென்ன
காத்துமே வர்ணகுலதிலகன் மீகாமன்
பையரவின்மணி கொண்டு செல்லுமெனவேதான்
வேற்றுமையில்லாமலே பத்தரைமாத்தின்
மிகுபசும் பொன்னுக்கு நாகமணிதரிசாய்
நேர்த்தியதாகவே கோவலர்தமக்கும்
நேரான கண்ணகைக்கும் மணமுடித்தார்

6. மணமதுமுடிக்கவே, முரசமது ஏக்காளம்
வாகானதம்பட்டம், மத்தளம், உடுக்கை
குணமான நாகசின்னம், சங்குவாத்தியம்
குமுறவேதிமி, திமியென நடனமாட
பணஅரவின் மணிதரிசிவிடு சிலம்போசை
பாவையர்கள் தான்குரவையான ஒலிசெய்ய
குணமான கண்ணகைக்கு மணமுடித்தார்
கோதையர்கள் தானின்று கூறிவாழ்த்தினரே.



ஆசிரியர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள்

பிரபல கிராமியக் கலைஞர்.

ரகம், கும்மி, வசந்தன் கூத்து போன்ற கலைகளில்

இளைஞர்களைப் பயிற்றுவித்தும்

பொது நிகழ்ச்சிகள் பலவற்றில் கிராமியக்கலைகளை

இடம்பெறச் செய்தும் பாராட்டுப் பெற்றவர்.

மண்முனை தென் எருவில் பற்று

பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினர்.

பாடல்களை யாத்தும், மெட்டமைத்துப் பாடியும்

புகழ் பெற்றவர்.

அடக்கமே உருவானவர், அதனால்

குடத்திலிட்ட விளக்காக இருப்பவர்.

கலையுலகில் இவருக்குத் தனி இடம்